01 - 28

10-04-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=


# Saturday மெயில்

සැටඩේ මේල්

*A Fascinating Weekly Bulletin*

# சானியா நேற்று ஷொயிப்பின் இரண்டாவது மனைவியானார்





பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்தியாவின் டெனிஸ் வீராங்கனை சானியா மிர்சாவுக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஷொயிப் மாலிக்கிற்கும் இடையிலான திருமணம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு தென்னிந்திய மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகர் ஹைதராபாத்தில் நடைபெற்றது.

திருமண வைபலம் எதிர்வரும் வியாழக்கிழமையே நடைபெறவிருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆயிஷா சித்திக் என்ற ஹைதராபாத் பெண்ணை மாலிக் முன்னர் திருமணம் செய்திருந்ததாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மூண்ட சர்ச்சைகளுக்கு முடிவு காணப்பட்டதையடுத்து, திட்டமிட்ட தினத்திற்கு முன்னதாக திருமண வைபலத்தை நடத்துவதற்கு அவசரமாகத் தீர்மானிக்கப்பட்டது.

வக்பு சபையில் முஸ்லிம்களின்

(2ஆம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்றுக்கிரக வாசிகள் உலகில் மாறுவேடங்களில் நடமாடுகிறார்களா?



வேற்றுக் கிரகவாசிகள் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் மனிதர்கள் போன்று மாறுவேடங்களில் எங்கள் மத்தியில் திரிகிறார்கள் என்றும் உலகில் குறைந்தது 20 சதவீதமான மக்கள் நம்புகிறார்கள் என்று உலகளாவிய ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்திருக்கிறது.

ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் கருத்துக்கணிப்பு அமைப்புகளில் ஒன்றான இப்சோஸ் (IP-SOS) 22 நாடுகளில் 23 ஆயிரம் பேர் மத்தியில் வேற்றுக் கிரகவாசிகள் பற்றிய ஆய்வொன்றை நடத்தியது.

வேற்றுக்கிரகவாசிகள் எங்கள் மத்தியில் மனிதர்கள் போன்று மாறுவேடத்தில் நடமாடுவதாக இந்தியாவிலும் சீனாவிலும் 40 சதவீதமான மக்கள் நம்புகிறார்கள். ஆனால், இத்தகைய நம்பிக்கை மிகவும் குறைந்த நாடுகளாக பெல்ஜியம், சுவீடன் மற்றும் நெதர்லாந்து (8 சதவீதமானோர்) ஆகியவை விளங்குவதாகவும் ஆய்வின் மூலம் தெரியவந்திருக்கிறது. எங்கள் மத்தியில் வேற்றுக்கிரகவாசிகள் நடமாடவில்லை என்று 80 சதவீதமான மக்கள் கருதுகிறார்கள். சனத்தொகையைப் பெருமளவில் கொண்ட நாடுகளிலேயே வேற்றுக்கிரகவாசிகள் பூமியில் நடமாடுவதாக நம்பிக்கை அதிகளவில் காணப்படுகிறது. சிறிய சனத்தொகையைக் கொண்ட நாடுகளில் இந்த நம்பிக்கை குறைவாகவே இருக்கிறது என்று இப்சோஸ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட உதவித் தலைவர் ஜோன் றைட் தெரிவித்திருக்கிறார்.

ஆண்களை விடவும் பெண்களே கூடுதலாக வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய நம்பிக்கையைக் கொண்டிருக்கிறார்கள். இதில் ஆண்கள் 17 சதவீதத்தினராகவும் பெண்கள் 22 சதவீதத்தினராகவும் காணப்படுகிறார்கள்.

நம்பிக்கையைக் கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் 35 வயதுக்கும் குறைவானவர்களாக இருக்கிறார்கள்.

---

**சானியா...**

(முன்பக்கத் தொடர்ச்சி)

திருமணங்களுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களைக் கையாளும் பிரிவில் உள்ள முக்கியஸ்தர்கள் சானியாவுக்கும் ஷொயிப்பிற்கும் இடையிலான திருமண சான்றுப்பத்திரத்தில் டெனிஸ் வீராங்கனை பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரின் இரண்டாவது மனைவி என்று தெளிவாகக் குறிப்பிடப்படும் என்று நேற்றைய தினம் அறிவித்திருந்தார்கள்.

ஷொயிப் முன்னர் தன்னைத் திருமணம் செய்துவிட்டு ஏமாற்றிவிட்டதாக ஆயிஷா சித்திக் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து சானியாவின் குடும்பத்தலைவர்கள் மற்றும் சமூகத்தில் உள்ள முக்கியஸ்தர்களின் மத்தியஸ்தத்தின் மூலமாக சர்ச்சை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. முதலில் ஆயிஷா சித்திக்கைத் தான் திருமணம் செய்யவில்லை என்று கூறிய ஷொயிப் மாலிக் பின்னர், அதை ஒத்துக்கொண்டு அந்தப் பெண்மணியை விவாகரத்துச் செய்வதாக முறைப்படி அறிவித்தார்.

தனது மகளை விவாகரத்து செய்யாமல் ஷொயிப்புக்கும் சானியாவுக்கும் இடையிலான திருமணத்தை ஒருபோதுமே நடத்துவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்று ஆயிஷாவின் தந்தை அச்சுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2002ஆம் ஆண்டில் ஷொயிப் தன்னை தொலைபேசி ஊடாக திருமணம் செய்துகொண்டதாக கூறிய ஆயிஷா அது தொடர்பான திருமணச் சான்றுப்பத்திரத்தையும் பகிரங்கத்தில் காண்பித்தார்.

விவாகரத்துப் பத்திரத்தில் கடந்த புதன்கிழமை கைச்சாத்திட்ட ஷொயிப், இஸ்லாமிய சம்பிரதாயப்படி ஆயிஷாவுக்கு மூன்று மாதங்களுக்கான தாபரிப்பு பணமாக 15 ஆயிரம் ரூபாவையும் செலுத்தினார்.

நேற்று இரவு ஹைதராபாத்தின் ஜுபிலிஹில் பகுதியில் அமைந்திருக்கும் சானியாவின் இல்லத்தில் இஸ்லாமிய சம்பிரதாயப்படியான திருமணம் நடைபெற்றது. இருவரினதும் நெருங்கிய உறவினர்களே வைபவத்தில் பங்குபற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் மின்வெட்டுகள் ஏன்?

மின்சாரம் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாகவுள்ளது. இத்தகைய மின்சாரத்தை நம்பியே இன்று நம்மவர் வாழ்வும் சுழல்கிறது. மின்சாரம் இல்லையென்றால் அவர்களது வாழ்வும் இல்லை என்று சொல்லுமளவிற்கு மின்சாரம் மக்களது வாழ்வுடன் பின்னிப் பிணைந்து விட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது.

இத்தகைய அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகக் காணப்படும் மின்சாரம் யாழ்.குடாநாட்டு மக்களுக்குச் சீராகக் கிடைப்பதில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

யாழ்.குடாநாட்டில் சமீப நாட்களாக உத்தியோகப்பற்றற்ற அறிவித்தல்கள் எதுவுமின்றி அடிக்கடி மின் துண்டிக்கப்பட்டு வருவதாக பிரதேச மின்பாவனையாளர்கள் விசனமும் கவலையும் தெரிவிக்கின்றனர்.


இந்த உத்தியோகப்பற்றற்ற அறிவிப்பின்றிய மின்வெட்டானது தமது அன்றாடக் கருமங்களைப் பெரிதும் பாதித்து வருவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை கடந்த வருடம் (2009) அதற்கு முந்திய வருடம் (2008) மின்வெட்டு அமுலில் இருந்து வந்தது.

அதாவது சுழற்சிமுறையிலான மின்வெட்டு உத்தியோகபூர்வமான அறிவிப்புகளுடன் இலங்கை மின்சார சபையால் அமுல்படுத்தப்பட்டு வந்தது. இவ்வறிப்புகளின் பிரகாரம் மின்பாவனையாளர்கள் தமது பாவனைத் தேவைகளை நிறைவு செய்து வந்தனர்.



தற்போது உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து மின்பிறப்பாக்கிகள் யாழ்.குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட்டு ஓரளவுக்கேனும் மின்வெட்டு அமுல்படுத்தப்படாது சீரான மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



இந்நிலையில், சமீப நாட்களாக உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எதுவுமின்றி திடீர் திடீரென மின்வெட்டு இடம்பெற்று வருவதாகப் பிரதேச மின்பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு திடீர் திடீரென மின்வெட்டு இடம்பெறுவது யாழ்.குடாநாட்டில் மீண்டும் மின்வெட்டை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான பரீட்சார்த்த நடவடிக்கையாகவிருக்குமோ என்றும் அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

இரவு நேரங்களில் திடீர் திடீரெனத் துண்டிக்கப்பட்டுவரும் மின்சாரம் மூன்று,நான்கு மணித்தியாலங்களின் பின்னரே மீண்டும் வழங்கப்பட்டு வருவதாகவும் மின்பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக மாலை 6 மணிக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டால் 9 அல்லது 10 மணிக்குப் பின்னரே மின்சாரம் வழங்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம், பாடசாலை மாணவர்கள் தமது அன்றாட கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் அதேநேரம், ஆசிரியர்களும் தமது கற்பித்தல் நடவடிக்கைக்கான முன் ஆயத்தச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவரும் நேரமாக அமைந்திருப்பதால் இம்மின்வெட்டு நேரம் முறையற்றதொன்று என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இம்மின்வெட்டை அமுல்படுத்தும் அதிகாரிகள் பாவனையாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு முன்கூட்டியே அறிவிப்புகளை விடுத்து மின்வெட்டை மேற்கொள்வது சாலப்பொருத்தமாக இருக்கும்.

**செ.சக்திதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் கவனத்திற்கு...



பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கின்ற மாணவர்களுடைய வாழ்வில் பட்டமளிப்பு வைபவம் என்பது மிகவும் மகிழ்ச்சிகரமானது. பட்டம் வழங்கப்படுகின்ற அந்த உன்னதமான நாளினை அவர்கள் என்றுமே மறந்துவிடமுடியாது. பட்டம் பெறுகின்ற ஒவ்வொருவருடைய வாழ்வின் குறிப்புகளில் அது பொன் எழுத்துகளால் பொறிக்கப்படவேண்டிய நாளாகின்றது.

பல மாணவர்கள் தங்களுடைய பட்டமளிப்பு விழாவை பெரிய கொண்டாட்டமாகவே நடத்துவதுண்டு.அழைப்பிதழ்கள் தயாரித்து தமது உற்றார், உறவினர்,நண்பர்களுக்கு அனுப்பி அனைவரையும் அழைத்து அவர்களையும் மகிழ்ச்சிப்படுத்தி தாங்களும் மகிழ்வார்கள்.

ஆனால், இவ்வாறான மகிழ்ச்சிகரமான நாளில் பட்டம்பெற்று வெளியேறிய சில மணித்துளிகளிலேயே பல மாணவ மாணவியர் மன உளைச்சலால் கண்ணீர் விட்டுக் கதறியழுகின்ற சம்பவங்களும் நடைபெறுகின்றனவென்றால் நம்புவீர்களா? அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இது நடந்தேறியிருக்கின்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா கடந்த மார்ச் மாதம் 26,27,28 ஆகிய மூன்று தினங்கள் நடைபெற்றன. வட பகுதியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக சில வருடங்கள் நடைபெறாதிருந்த பட்டமளிப்பு விழா இவ்வருடம் மிகவும் கோலாகலமாகவே நடைபெற்றது. 15 அமர்வுகளாக நடைபெற்ற இப்பட்டமளிப்பு விழாவில் ஏறக்குறைய நாலாயிரம் பேருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன.இங்கு இடம்பெற்ற ‘கப் கலக்ஷன், (hap collection) எனப்படுகின்ற சீரழிவான நிதிச் சேகரிப்புத் தொடர்பாக இப்பத்தியில் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் நடைபெறுகின்ற பட்டமளிப்பு வைபவத்தன்று அரங்கில் பட்டம் பெற்று வெளியேறுகின்ற ‘சிரேஷ்ட மாணவர்களை’ வெளியே நிற்கின்ற ‘கனிஷ்ட மாணவர்கள்’ கைலாகு கொடுத்து வாழ்த்துவது வழக்கம், பட்டம் பெற்று வருபவர்கள் இந்த வாழ்த்து மகிழ்ச்சியில் வெளிப்பாடாக தங்கள் பொக்கற்றிலுள்ள சிறுதொகைப் பணத்தை ( 10 ரூபா, 20 ரூபா தொடங்கி வசதிக்கேற்ப )அவர்களின் தொப்பிகளில் இடுவார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் கனிஷ்ட மாணவர்கள் நிரையாக நின்று வாழ்த்த சிரேஷ்ட மாணவர்களும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திச் செல்வர். இந்த ஒழுங்கான நடைமுறை தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் நிலவுகின்றது.

ஆனால்,எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிகவும் வெட்கக்கேடான அருவருக்கத்தக்க பணப்பறிப்பு முறையாகவே இச் செயற்பாடு நடைபெறுவதனை அவதானிக்க முடிகிறது. பட்டம் பெற்று வெளியே வருகின்ற சிரேஷ்ட மாணவ மாணவியரைத் துரத்திச் சென்று சுற்றி வளைக்கின்ற கனிஷ்ட மாணவர்கள் அவர்கள் கொடுக்க முன்னரே பணத்தைப் பறித்துச் செல்கின்றனர். இதில் கேவலமான செயல் என்னவென்றால் பட்டமளிப்பு வைபவத்தைப் பார்வையிடுவதற்காக வெளியேயிருந்து செல்கின்ற இளைஞர்களும் இப் பணப் பறிப்பு முயற்சியில் ஈடுபடுகின்றமையாகும்.

பட்டம் பெற்று வெளியேறிய பல மாணவிகளைத் துரத்திச் சென்ற கனிஷ்ட மாணவர்களும் வெளியேயிருந்து உட்சென்ற இந்த இளைஞர் குழுவும் அவர்களைச் சுற்றி வளைத்து *hap collection* என்ற போர்வையில் கீழ்த்தரமான செயல் புரிந்திருக்கிறார்கள். இதன்போது அந்த மாணவிகள் ‘நசுக்கப்பட்டு’ அவர்களிடமிருந்து பணம் பறிக்கப்பட்டிருக்கின்றது. சில மாணவிகளின் கறுப்பு மேலங்கிகள் கூட இழுத்துக் கழற்றப்பட்டிருக்கின்றன. இதன் உச்சக்கட்டமாக சில மாணவிகள் குறிப்பிட்ட தூரம் வரை தூக்கிச் செல்லப்பட்டிருக்கின்றனர். இந்த மன விரக்தியால் சில மாணவிகள் பல்கலைக்கழகத்தில் அழுதுகொண்டிருந்ததையும் காணக்கூடியதாகவிருந்தது.

இவ்வாறாகக் கப் கலக்ஷெனில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சில இளைஞர்களின் வாயில் மதுவின் நாற்றம் வீசிக்கொண்டிருந்தமை இங்கு குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டிய விடயமாகின்றது.

பல்கலைக்கழகம் என்பது மதிப்பு மிக்க இடம். அதுவும் எமது யாழ். பல்கலைக்கழகத்திற்கு சமூக மட்டத்தில் தனி மரியாதை இருக்கின்றது. இந்த மரியாதைக்குரிய இடத்தில் இவ்வாறான செயல் நடைபெறுவதை எவ்வாறு அனுமதிக்க முடியும்? பட்டமளிப்பு வைபவமென்பது பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற ‘வெல்கம் பார்டி’ (கனிஷ்ட மாணவரை வரவேற்கும் நிகழ்வு) போன்று தனியே பல்கலைக்கழக மாணவர்களுடன் மட்டும் நடைபெறுகின்ற வைபவம் இல்லை.மாறாக இதுவொரு சமூகநிகழ்வு.

தமது பிள்ளைகளின் பட்டமளிப்பு நிகழ்வைப்பார்வையிடுவதற்கென ஏராளமான பெற்றோரும் தமது மாணவர்களின் இந்த அருமையான நிகழ்வில் கலந்துகொள்ளவென ஏராளமான ஆசிரியர்களும் தமது நண்பர் நண்பிகளின் மகிழ்ச்சியில் திளைப்பதற்கென ஏராளமான நண்பர் கூட்டமுமென சமூகமே திரண்டிருக்கின்ற இந்தப் பெருவிழாவில் கனிஷ்ட மாணவர்களும் அவர்களுடன் இணைந்த இளைஞர் குழுவும் நடந்துகொள்கின்ற முறைமை துளியேனும் ஏற்புடையதல்ல.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு வைபவத்தைப் பார்வையிட வந்த ஆசிரியரொருவர் அங்கு இடம்பெற்ற இந்தச் சம்பவங்களைப் பார்வையிட்ட பின்னர் இது கப் கலக்ஷென் இல்லை.வழிப்பறிக்கொள்ளை மாதிரியே நடைபெறுகின்றது என்று கூறினார்.

மேலும் யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த வருடங்களில் பட்டம் பெற்ற நிலையில் இம்முறை தமது நண்பர்களுடன் வந்தவர்கள் ‘இம்முறை இங்கு எல்லை மீறிய செயற்பாடுகளே இடம் பெறுகின்றன’ என்று தமது விசனத்தை வெளியிட்டனர்.

இந்தக் கப் கலக்ஷென்காரரின் இம்சைகளுக்குள்ளாக்கப்பட்ட பல மாணவிகள் தங்கள் தலை மற்றும் முக அலங்காரங்கள் கலைந்த நிலையில் புகைப்படங்கள் எடுப்பதில் பல சிரமங்களை எதிர்கொண்டதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

நடந்தவைகள் நடந்தவைகளாகட்டும். ஆனால், அடுத்து வருகின்ற பட்டமளிப்பு விழாக்களில் இந்தக் கப் கலக்ஷென்காரர்களின் ஒழுங்கான நடைமுறைகள் பேணப்படுவதை யாழ்.பல்கலைக்கழக சமூகம் உறுதிப்படுத்தவேண்டும். துணைவேந்தர், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் போன்றோர் இவ்விடயத்தில் தெளிவுடன் செயற்படுவதன் மூலமே சமூகத்தில் எமது பல்கலைக்கழகத்தின் மதிப்பை நிலைநாட்ட முடியும்.

குறிப்பாக மக்களை வழிப்படுத்தவென அவ்வப்போது அறிக்கைகளை விடுகின்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இவ் விடயத்தில் அதிக அக்கறையெடுக்கவேண்டும். பட்டமளிப்பு வைபவத்தன்று வெளி நபர்கள் கப் கலக்ஷென் செய்வதைத் தடுப்பதற்காக பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் அன்றைய தினம் பல்கலைக்கழகப் பெயர் பொறிக்கப்பட்ட ரீ.சேர்ட்கள் அணிவதைக் கட்டாயப்படுத்தலாம். வழி வழி வருகின்ற மாணவர் ஒன்றியங்கள் பீடங்களினூடாக இதனைச் செயற்படுத்தலாம்.

அன்றுதொட்டு இன்றுவரை சமூக மட்டத்தில் நற்பெயருடன் விளங்குகின்ற எமது யாழ்.பல்கலைக்கழகத்தின் பெருமையைக் கட்டிகாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினும் சரஸ்வதியும்

இந்தியாவின் பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பதற்காக இவ்வாரம் சென்னைக்கு வந்திருந்த இந்தியாவின் தலைசிறந்த துடுப்பாட்டக்காரர் சச்சின் டெண்டுல்கர் தனது ரசிகையான 87 வயது மூதாட்டியை ஹோட்டலில் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

சென்னையைச் சேர்ந்தவரான திருமதி சரஸ்வதி வைத்தியநாதன் என்ற மூதாட்டியுடனான சந்திப்பின் போது மிகவும் மரியாதை கொடுத்து கண்ணியமாகப் பேசிய டெண்டுல்கர் எனது விளையாட்டை நீங்கள் மிகவும் உன்னிப்பாக அவதானித்திருப்பதையும் எனது சாதனைகளை அறிந்துவைத்திருப்பதையும் நீங்கள் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் வாசித்து அறிந்து கொண்டேன்.உங்களது ஆசீர்வாதம் எனக்குத் தேவை என்று கூறினார்.



சென்னையில் இருந்து வெளியாகும் பிரபல ஆங்கில தினசரியான இந்துவின் ஏப்ரல் முதலாம் திகதிய இதழுடன் இணைப்பாக வெளிவந்த 'த இந்து மெட்ரோ' பிளஸில் முதிர்ந்த வயதுக்கு மத்தியிலும் சரஸ்வதி டெண்டுல்கரின் கீர்த்திமிக்க கிரிக்கெட் பயணத்தின் தடங்களையெல்லாம் மனதில் வைத்திருப்பதைப் பற்றிய செய்தி வெளியாகியிருந்தது.

டெண்டுல்கரின் சாதனைகளைப்பற்றி தனது சொந்தத்தில் சரஸ்வதி பதிவுகளையும் செய்திருக்கிறார். டெண்டுல்கர் கலந்து கொள்ளும் சகல கிரிக்கெட் போட்டிகளையும் தவறாமல் இரவு பகலென்று பொருட்படுத்தாமல் சரஸ்வதி பார்ப்பதுடன் அவரின் வெற்றிக்காகவே எப்போதும் பிரார்த்திப்பாராம்.

மிகவும் பலவீனமான உடல் நிலையில் இருக்கும் சரஸ்வதி நடப்பதற்கு இப்போது சற்று சிரமப்படுகிறார். இருந்தாலும் டெண்டுல்கரை நேரில் கண்டதும் அவரின் முகத்தில் ஒரு பிரகாசத்தை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாகவும் அவரது வாய் மாத்திரமல்ல, கண்களும் கூடச் சிரித்தன என்று பத்திரிகையாளர்கள் வர்ணித்தனர்.

ரெண்டுல்கரைச் சந்திப்பதற்குக் கிடைத்த வாய்ப்பை தன் வாழ்நாளில் பெரிதாக மதிப்பதாகக் கூறிய சரஸ்வதி உங்களைச் சந்தித்தது எனது அதிர்ஷ்டம் என்று குறிப்பிட்டார். அப்போது குறுக்கிட்ட டெண்டுல்கர் இல்லை, இல்லை உங்களைச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்புத் தான் எனக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்று பெருமிதத்துடன் சொன்னார்.

டெண்டுல்கரின் சாதனை, சோதனைகளைப் பற்றி சரஸ்வதி ஒவ்வொன்றாக ஒழுங்கு தவறாமல் சொன்னதைப் பார்த்து அவர் அதிர்ச்சியடைந்தார். சர்வதேச கிரிக்கெட் விளையாட்டில் 100 செஞ்சரிகளை ரெண்டுல்கார் பெற்று சாதனை புரியவேண்டுமென்பதே தனது பிரார்த்தனை என்று சரஸ்வதி கூறினார்.அந்தச் சாதனையைப் படைப்பதற்கு ரெண்டுல்கர் சர்வதேச போட்டிகளில் இன்னும் 7 செஞ்சரிகளைப் பெறவேண்டியிருக்கிறது.

அந்தச் சாதனையை நான் படைப்பேன் என்று மகிழ்ச்சியுடன் சரஸ்வதியிடம் கூறினார் டெண்டுல்கர்.

விநாயகர் விக்கிரகம் ஒன்றை டெண்டுல்கருக்கு நினைவுப் பரிசாக மூதாட்டி கொடுத்தார். அப்போது மீண்டும் ஒரு தடவை அவர் சரஸ்வதியின் கால்களைத் தொட்டு வணங்கினார்.

கிரிக்கெட் விளையாட்டில் சாதனைகள் படைத்த பல வீரர்களின் கையெழுத்துகள் கொண்ட துடுப்பு ஒன்றை சரஸ்வதி பேணிப்பாதுகாத்துவருகிறார். அதில் டெண்டுல்கரின் கையெழுத்துமாத்திரமே இல்லை. அந்தக் குறையையும் அன்றைய தினம் டெண்டுல்கர் போக்கிக் கொண்டார். அந்தத் துடுப்பில் அவர் கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

டெண்டுல்கரைத் தனது நான்காவது பேரப்பிள்ளை என்று அழைத்த சரஸ்வதி அஞ்சலி, (டெண்டுல்கரின் மனைவி), அர்ஜுன் (மகன்), சாரா (மகள்) எல்லோரும் சுகமாக இருக்கிறார்களா என்று நலம் விசாரித்தார். ஆமாம் என்று பதிலளித்தார் டெண்டுல்கர்.

சரஸ்வதியின் இரண்டாவது மகன் சி.வி. வெங்கட கிருஷ்ணன் தாயாரைப்பற்றிக் கூறுகையில், அம்மாவுக்கு ஏதாவது சுகயீனம் ஏற்பட்டால் அவருக்கு மருந்து டெண்டுல்கரின் துடுப்பாட்டத்தைப் பார்ப்பதே யாகும். தொலைக்காட்சியில் டெண்டுல்கரைப் பார்த்தால் அம்மாவுக்கு சகல வலியும் மறைந்து போய்விடும். அம்மாவுடைய ரொனிக்கே டெண்டுல்கர் தான்.

சரஸ்வதியுடனான சந்திப்பின் போது பலதடவைகள் டெண்டுல்கர் உணர்ச்சிவசப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

இறுதியாக டெண்டுல்கரைப் பார்த்து சரஸ்வதி அம்மாள் 'நீங்கள் உயரத்தில் சிறியவராக இருந்தாலும் செயலில் உயரமானவர்' என்று சொன்னாள். மீண்டும் ஒரு புன்சிரிப்புடன் தனது ரசிகையான மூதாட்டிக்கே விடைகொடுத்தார் சாதனை வீரர்.

# காரை அதிவேகமாக செலுத்தியதன் காரணம்



ஒருமாலைப் பொழுதில் ஜோன் காரை மிகவும் வேகமாக ஓட்டிக் கொண்டு சென்றார். அந்த வீதியில் அனுமதிக்கப்பட்ட வேகத்தைவிடவும் கூடுதலான வேகத்திலேயே அவர் சென்று கொண்டிருந்தார்.

தனது பின்நோக்கு கண்ணாடியை ஜோன் நோக்கிய போது தனது காருக்குப் பின்னால் சிவப்பு விளக்குடன் பொலிஸ் கார் ஒன்று வந்து கொண்டிருந்ததைக் கண்டார்.

பொலிஸ்கார் தன்னை முந்திச் சென்றுவிடுவதற்கு அனுமதிப்பதில்லையென்று முடிவெடுத்துக் கொண்ட ஜோன் மேலும் வேகத்தைக் கூட்டினார்.

ஒரு மணித்தியாலத்துக்கு 60, 70, 80, 90 மைல்கள் என்று ஜோனின் காரின் வேகம் அதிகரித்துக் கொண்டு சென்றது.

பொலிஸ் காரும் அதன் வேகத்தை அதிகரித்துக் கொண்டு ஜோனின் காரை மிகவும் நெருக்கமாகவே பின் தொடர்ந்து கொண்டிருந்தது.

இறுதியாக ஜோன் தனது காரின் வேகத்தை மணிக்கு 100 மைல்களாக அதிகரித்தார். அப்போதும் பொலிஸ் கார் மிக நெருக்கமாகப் பின் தொடரவே செய்தது.

அதற்குமேல் வேகத்தை அதிகரிப்பதில் பயனில்லை என்று உணர்ந்துகொண்ட ஜோன் காரை ஓரிடத்தில் ஓரமாக நிறுத்தினார். பொலிஸ் காரும் பின்னால் வந்து நின்றது.

பொலிஸ் அதிகாரியொருவர் அந்தக் காரில் இருந்து இறங்கி ஜோனை நோக்கி விரைந்துவந்தார்.


'எதற்காக படுமோசமான வேகத்தில் இந்த வீதியில் காரை ஓட்டினீர். உம்மைத் துரத்திக் கொண்டுவந்ததில் எனக்குப் பெரும் பதற்றமாகப் போய்விட்டது. உம்மை நான் ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுகிறேன். எதற்காக இந்த வேகத்தில் வந்தீர் என்பதை மாத்திரம் சொல்லும்' என்று பொலிஸ் அதிகாரி ஜோனிடம் மிகவும் பண்பாகக் கேட்டார்.

ஒரு கணம் சிந்தித்துவிட்டு பொலிஸ் அதிகாரியைப் பார்த்து ஜோன் சொன்னார்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் ஒரு பொலிஸ் அதிகாரியுடன் எனது மனைவி ஓடிவிட்டாள். எனது கார்க் கண்ணாடியில் உங்கள் கார் என் பின்னால் வந்துகொண்டிருப்பதைக் கண்டபோது எனது மனைவியைக் கூட்டிக் கொண்டு ஓடிய பொலிஸ் அதிகாரியின் கார்தான் அதுவோ என்று நினைத்து நான் வேகத்தைக் கூட்டினேன்.நீங்களும் தொடர்ச்சியாக வேகத்தைக் கூட்டிக் கொண்டேயிருந்தீர்கள். அதனால், மனைவியைக் கூட்டிக் கொண்டு ஓடிய பொலிஸ் அதிகாரி அவளை என்னிடம் திருப்பி ஒப்படைக்கத்தான் என்னைத் துரத்துகிறாரோ என்று பயந்து போனேன். அதனாலேயே நான் மணிக்கு 100 மைல்கள் வரை வேகத்தை அதிகரித்து காரை ஓட்டினேன் அவ்வளவு தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சைக்காரர் இல்லாத பூமி வேண்டும்!



வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்த நிலையில் அவற்றுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் திண்டாடி வயிற்றைக் கழுவுவதற்காக பிச்சையெடுப்பவர்களில் ஒரு பகுதியினரின் பிழைப்பிலும் கடந்த முதலாம் திகதி மண் விழுந்துள்ளது. யாசகம் கேட்டு பிழைப்பு நடத்தும் இவர்களுக்குப் பேரிடியான அறிவிப்பொன்றை இலங்கை புகையிரதத் திணைக்களம் அண்மையில் வெளியிட்டிருந்தது. அதன்படி கடந்த ஏப்ரல் 1ஆம் திகதி முதல் அவர்கள் ரயிலில் பிச்சை கேட்க முடியாது. அதனைத் தொடர்ந்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கமும் வெகுவிரைவில் தனியார் பஸ்களில் பிச்சையெடுக்க தடை விதிக்கவுள்ளதாக அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தது.

இந்த அறிவிப்பு அநேகமானோருக்கு பெரும் நிம்மதியை ஏற்படுத்தும். ஏனெனில், இவ்வாறான ரயில் மற்றும் பஸ்களில் யாசகம் கேட்டு வருபவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் அநேகர். பஸ் தரிப்பிடத்தில் இருந்து கிளம்புவதற்கு முன்னரே 2-3 பேர் யாசகம் கேட்டு பஸ்களில் ஏறி இறங்குவர். இவர்களால் பயணிகள் சங்கடமான நிலையை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. அந்த யாசகர்கள் அனைவருக்கும் பணங்கொடுக்க முடியாத போதிலும் அவர்களைத் தவிர்க்க முடியாத தர்மசங்கடமான நிலையும் ஏற்படுகிறது. வேறு பொது இடங்களில் யாசகம் கேட்போரை விட்டு சற்று விலகிச் செல்ல முடியும். ஆனால் பஸ் மற்றும் ரயில்களில் அமர்ந்திருக்கும் ஆசனத்தின் அருகில் வந்து யாசகம் கேட்கும்போது எங்கு செல்வது? இப்படி தர்ம சங்கடமான நிலையிலிருந்து பாதுகாக்கும் அறிவிப்பு நிம்மதி அளிப்பதுதானே?




அது தவிரவும் இவ்வாறான யாசகர்களால் ஏற்படும் வேறு பல பாதிப்புகளில் இருந்து பாதுகாப்பைப் பெறவும் இந்நடவடிக்கைகள் உதவியாகவிருக்கும். 'பிட்பொக்கட்' எனப்படும் கொள்ளைச் சம்பவங்கள், பணங்கொடுக்காத பயணிகள் அச்சுறுத்தப்படுதல் போன்ற சம்பவங்கள் தவிர்க்கப்படும். அத்துடன், இங்கு வறுமையால் யாசகம் கேட்டு வருபவர்கள் மட்டுமன்றி தமது சுயலாபங்களுக்காக கௌரவப்பிச்சை எடுப்பவர்களின் தொல்லையும் பெரும் பிரச்சினையாகவே இருக்கிறது. பொதுவாக இந்த கௌரவப் பிச்சை படித்த சமூகத்தாலேயே மேற்கொள்ளப்படுவது வேதனைக்குரியது. இவர்கள் தமது பொழுதுபோக்குக்காக இவ்வாறு 'கலக்ஷன்' என்ற பெயரில் பணம் திரட்டினாலும் இதுவும் ஒருவகையான பிச்சையே.

இவ்வாறு பல்வேறு வகையில் பயணிகளைப் பாதுகாக்க இந்தத் திட்டங்கள் உதவினாலும் இது உண்மையில் பாதிக்கப்பட்ட நிலையில் ஒரு கவளம் உணவுக்காக யாசகம் கேட்போரை பாதிக்கத்தான் போகிறது. உடல் அங்கவீனமுற்ற நிலையில், உழைக்க வழியின்றி இருப்பவர்களையே இந்நடைமுறைகள் பாதிக்கப்போகின்றன. பொது இடங்களை தவிர்த்த ஆளரவமற்ற இடங்களில் தான் யாசகம் பெற முடியுமா? இந்நிலையில் பஸ், ரயில்களிலும் பிச்சையெடுக்க தடைவிதித்தால், இவர்களின் அடுத்த வேளை உணவும் வாழ்வும் கேள்விக்குரியதாகிவிடுமல்லவா? பொதுமக்களை பாதுகாக்கும் வகையிலான திட்டங்கள் என்ற போர்வையில் அம்மக்களில் ஒரு பகுதியினராக வறுமையில் வாடும் யாசகர்களின் பிழைப்பில் மண்ணையள்ளிப் போடுவது எந்த வகையில் நியாயம்?

எனவே, இவ்வாறான திட்டங்களை முன்வைத்து பயணிகளைப் பாதுகாக்கும் அதேவேளை, வறுமையால் வாடும் யாசகர்களை பாதுகாக்கும் திட்டங்களும் முன்வைக்கப்பட வேண்டும். பிச்சையெடுப்பதைத் தடை செய்யும் அதேவேளை அவர்கள் தொடர்பான மாற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் மூலம் பயணிகளையும் பாதுகாக்கலாம். உண்மையாக பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாக்கலாம். கௌரவப் பிச்சைக்காரர்கள் மற்றும் தண்டல்காரர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்கலாம். உதாரணமாக, பிச்சையெடுப்பவர்கள் உண்மையில் வறுமையால் பிச்சையெடுப்பவர்களாயின் அவர்களுக்கு மாற்று உழைப்பை ஏற்படுத்தி கொடுக்க வழியமைத்துக் கொடுக்கவும். அதன் பின் தொடர்ந்தும் பிச்சையெடுப்பின் அவர்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கையெடுக்கவும். பயணிகளுக்கு அசௌகரியம் அளிக்கும் வகையில் கௌரவப் பிச்சையெடுப்போர் மற்றும் தண்டல்காரர்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் ஏற்ற வகையிலான நடவடிக்கைகளை முன்வைக்க முடியும்.

இவ்வாறான திட்டங்கள் முறையாக நிறைவேற்றப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படின் பிச்சைக்காரர் அற்ற உழைப்பாளிகளின் தேசம் உருவாகுமாயின் அது நம் நாட்டையே சொர்க்க பூமியாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**எம்.தயானி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிளயரும் மனைவியும் சுட்ட ரொட்டி ஏற்படுத்திய பரபரப்பு



பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ரொனி பிளயரும் மனைவி செரியும் சேர்ந்து கடந்த சனிக்கிழமை வீட்டில் காலை உணவுக்காக ரொட்டி தயார் செய்து கொண்டிருந்த போது எழுந்த புகையால் அபாயமணி அலறியது.

அந்த அலறலைக் கேட்டு பிளயர் வீட்டுக்கு மூன்று தீயணைப்பு வாகனங்கள் வந்து சேர்ந்தன. அதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

லண்டனில் வாட்டன் அண்டர்வூட் பகுதியில் பிளயரின் வீடு இருக்கிறது. அந்தப்பகுதி முக்கியஸ்தர்கள் வாழும் பகுதியென்பதால் பிளயரின் வீட்டில் அபாயமணி ஒலித்தால் அது தீயணைப்பு நிலையத்தையும் எச்சரிக்கை செய்யும் வகையில் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

சனிக்கிழமை பிளயர் மனைவியுடன் சேர்ந்து ரொட்டி சுட்டார். அவர் ரொட்டி சுட்ட அடுப்பில் இருந்து புகை பெருமளவில் கிளம்பியது. அதனால் அலறிய அபாயமணி தீயணைப்பு நிலையத்தையும் எச்சரித்தது. உடனடியாகவே மூன்று தீயணைப்பு வாகனங்கள் பிளயரின் வீட்டுக்கு வந்துவிட்டன.

உடனே நிலைவரத்தைப் புரிந்துகொண்ட பிளயரின் மனைவி ரொட்டி சுட்ட அடுப்பில் இருந்து கிளம்பிய புகையே அபாயமணி அலறியதற்குக் காரணம் என்பதை தீயணைப்புப் படையினருக்கு விளக்கிக் கூறினார். புகைமட்டுமே வந்தது. தீப்பொறி அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

குசினிக்குள் பிரவேசித்த தீயணைப்புப் படைவீரர்கள் அடுப்பில் இருந்து வெளிக்கிளம்பிய புகையை மின்விசிறியை ஓடவிட்டு கலைத்தனர். பின்னர் தீவிபத்து ஏற்படாமல் இருப்பதற்கான சில ஆலோசனைகளையும் அவர்கள் பிளயர் தம்பதியினருக்கு வழங்கிவிட்டு அங்கிருந்து கிளம்பினர்.



## அம்மா, அம்மா குட்பாய்



இளைஞன் ஒருவன் சூப்பர் மார்க்கெட்டில் பொருட்களைத் தெரிவு செய்துகொண்டிருந்த போது மூதாட்டியொருவர் அவனைச் சுற்றிவந்து கொண்டிருந்தார். மூதாட்டி தன்னையே பின் தொடர்ந்து கொண்டிருப்பதைப் பற்றி அவன் பொருட்படுத்தாமல் தனக்குத் தேவையான பொருட்களை எடுத்து பைகளுக்குள் போட்டுக் கொண்டிருந்தான்.

இறுதியாக காசாளரின் கவுண்டருக்கு வந்த போது மூதாட்டி இளைஞனின் முன்னால் வந்து நின்றார். 'என்னை மன்னிக்க வேண்டும்'. உங்களையே உற்றுப் பார்த்துக் கொண்டு பின்னால் நான் வந்து கொண்டிருந்தால் ஏற்பட்டிருக்கக்கூடிய அசௌகரியத்துக்கு வருந்துகிறேன். உங்களை எனது மகனாக நினைத்தே இவ்வாறு செய்தேன். எனது மகனை நீண்ட காலமாக நான் காணவில்லையென்பதால் ஏற்பட்ட பாசவெளிப்பாடுதான் இது. வேறொன்றுமில்லை' என்று மூதாட்டி கூறினார்.

'அதனால் ஒன்றுமில்லை. என்னால் உங்களுக்கு செய்யக் கூடியது ஏதாவது இருக்கிறதா? உங்களுக்கு உதவ விரும்புகிறேன்' என்று பதிலுக்கு இளைஞன் சொன்னான்.

ஆம், ஆம் என்று பரபரப்புடன் சொன்ன மூதாட்டி, 'நான் சூப்பர் மார்க்கெட்டை விட்டு வெளியேறப் போகிறேன். நான் வெளியேறும் போது அம்மா, அம்மா குட்பாய் என்று நீங்கள் உரத்துச் சத்தமிட்டுக் கூறவேண்டும். எனக்கு அதைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கும்' என்று இளைஞனிடம் கூறினார்.

இளைஞனும் இதற்கு இணங்கி மூதாட்டி வெளியேறும் போது அம்மா, அம்மா, குட்பாய் என்று சத்தமிட்டான்.

அவ்வாறு சத்தமிட்டுவிட்டு காசாளரின் கவுண்டரை விட்டு இளைஞன் புறப்படத் தயாரான வேளை அவன் வாங்கிய பொருட்களுக்கான ரசீதுடன் இன்னொரு 2000 ரூபாவுக்கான ரசீதையுய் காசாளர் நீட்டினார்.

'நான் வாங்கிய பொருட்களுக்காக ஒரு ரசீதை எனக்குத் தந்து காசைப் பெற்றுக் கொண்டீர்கள். அது சரி. ஆனால், இரண்டாவது ரசீது எப்படி வந்தது' என்று காசாளரிடம் இளைஞன் கேட்டான்.

காசாளரிடமிருந்து பதில் வந்தது;

'தான் கொள்வனவு செய்த பொருட்களுக்கான பணத்தை எனது மகன் தருவான் என்று உங்கள் தாயார் சொன்னார்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகோதரர் கொலை தொடர்பான உண்மைகளை மூடிமறைத்த பெனாசிர்

# மறைந்த மாமியாரை சாடுகிறார் மருமகள் பாத்திமா பூட்டோ

கொலை செய்யப்பட்ட பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவி பெனாசிர் பூட்டோ அவரது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற சகோதரர் முர்டாசா பூட்டோவின் கொலை தொடர்பான உண்மைகளை மூடிமறைத்துவிட்டதாக மருமகள் பாத்திமா பூட்டோ குற்றஞ்சாட்டியிருக்கிறார்.


முர்டாசா பூட்டோவின் மகளான பாத்திமா இவ்வாரம் இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு வருகை தந்திருந்தார். அங்கு ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் அவர் 1996 செப்டெம்பர் 20 ஆம் திகதி இடம்பெற்ற தனது தந்தையின் கொலையில் பெனாசிரின் கணவரான தற்போதைய ஜனாதிபதி அசீவ் அலிசர்தாரிக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

சி.என்.என். - ஐ.பி.என். தொலைக்காட்சி சேவையில் 'டெவில்ஸ் அட்லக்கேற்' என்ற நிகழ்ச்சியில் அரசியல் ஆய்வாளர் காரன் தாப்பர், 'கொலையில் சர்தாரி சம்பந்தப்பட்டிருந்தாரா' என்று கேட்டதற்குப் பாத்திமா பூட்டோ 'ஆம்' என்று திட்டவட்டமாகப் பதிலளித்தார்.

மைத்துனரின் கொலையில் சர்தாரிக்கு இருந்திருக்கக் கூடிய தொடர்புகள் குறித்த குற்றச்சாட்டுகள் இதுவரை நிரூபிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முர்டாசா பூட்டோ கொலை செய்யப்பட்ட காலகட்டத்தில் பாகிஸ்தானின் பிரதமராக இருந்த பெனாசிர் பூட்டோவுக்குக் கொலையில் ஏதாவது பங்கு இருக்கிறதா என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பாத்திமா 'துர்திர்ஷ்டவசமாக ஆம்' என்றுபதிலளித்திருக்கிறார்.

தனது தந்தையின் கொலையில் மாமியாருக்குச் சம்பந்தம் இருப்பதாக நம்புவதற்கான காரணம் குறித்து விளக்கமளித்த 27 வயதான பாத்திமா பூட்டோ 'சட்டத்தின் ஆட்சி சீர்குலைந்திருந்த ஒருகால கட்டத்திலேயே பெனாசிர் நாட்டின் பிரதமராக இருந்தார். பெனாசிரின் இரண்டாவது அரசாங்கத்தின் கீழ் கொலையுண்ட ஆயிரக்கணக்கானவர்களில் எனது தந்தையும் ஒருவர். அதனால், தந்தையின் கொலைக்கான தார்மீகப்பொறுப்பு பெனாசிருக்கு உண்டு. தந்தை கொலையுண்ட பிறகு உண்மைகளை மூடிமறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் மாமியார் பெரும் பங்கு வகித்தார். வழக்குப் பதிவு செய்வதற்குக் கூட நாம் அனுமதிக்கப்படவில்லை' என்று குறிப்பிட்டார்.



தனது தந்தையாரின் கொலையின் பின்னணியில் உள்ள நிகழ்வுகளைப் பற்றி *'Songs of blood and sword'* என்ற நூலை பாத்திமா எழுதியிருக்கிறார். கொலையின் சாட்சிகள் சகலரும் கைது செய்யப்பட்டிருந்தனர். ஆனால், பெனாசிர் பூட்டோவின் அரசாங்கம் கவிழ்ந்த பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.



தனது தந்தையார் சுடப்பட்டபோது சம்பவ இடத்தில் பாகிஸ்தான் புலனாய்வுப் பணியகத்தின் தலைவரான மசூட் ஷெரீவ் இருந்தார். ஒரு கட்டத்தில் அவர் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மத்திய குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். சொந்தச் சகோதரரின் கொலை தொடர்பில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை தனது கட்சியின் மத்திய குழுவில் பெனாசிர் நியமித்தாரென்றால் அந்த நடவடிக்கை மூலம் காட்டப்பட்ட சமிக்ஞையை புரிந்து கொள்வதில் சிரமம் இருக்க முடியாது' என்று பாத்திமா பூட்டோ கூறினார்.

தனது சகோதரர் பாகிஸ்தானுக்குத் திரும்பி வருவதை பெனாசிர் பூட்டோ விரும்பவில்லை. ஜனாதிபதி ஜெனரல் ஸியா உல் ஹக்கின் அரசாங்கத்தில் பிரதமராகப் பதவி வகிப்பதற்கு பெனாசிர் விரும்பினார் என்று அந்தக் காலகட்டத்தில் சந்தேகிக்கப்பட்டது. முர்டாசா பூட்டோ கொலை செய்யப்பட்ட வேளையில் பாகிஸ்தானின் ஜனாதிபதியாகப் பதவிவகித்த பாரூக் லெகாரி பின்னர் அளித்த பேட்டிகளில் 'சர்தாரியின் கரங்களில் முர்டாசா பூட்டோவின் இரத்தம் தோய்ந்திருக்கிறது. வேறு எத்தனை பேருக்கு அந்தக் கொலையில் தொடர்பு இருந்தது என்பதை கடவுள் தான் அறிவார்' என்று குறிப்பிட்டிருந்தார் என்று பாத்திமா கூறியிருக்கிறார்.

பெனாசிர் பூட்டோவுக்கும் சகோதரர் முர்டாசா பூட்டோவுக்கும் இடையேயான சர்ச்சைக்குரிய உறவு குறித்து மேலும் பல விபரங்களை பாத்திமா பூட்டோ தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

'1993 தேர்தலில் எனது தந்தையார் போட்டியிடுவதற்குப் பெனாசிர் ஒரு தொகுதியை ஒதுக்குவதற்கு மறுத்தார். பூட்டோக்களுக்குச் செல்வாக்கு மிக்க வர்கானா தொகுதியில் போட்டியிட தந்தையார் விரும்பியிருந்தார்' என்று இந்த இளம் எழுத்தாளர் தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தள்ளாடும்' இளைஞர்கள்



இன்று இலங்கையில் இளையோரால் அதிகமாக விரும்பப்படும் பானமாக பியரே காணப்படுகின்றது. நன்மை, தீமை எந்த நிகழ்வாக இருந்தாலும் அங்கு மதுபான வகைகள் பிரதான இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன.

தெற்காசியப் பிராந்தியத்தில் அதிகமான குடிகாரர்களைக் கொண்ட நாடு இலங்கை என்று சில வருடங்களுக்கு முன்னர் ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் இலங்கையில் 'குடிமகன்' களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் போக்கே காணப்படுகின்றது. அந்தளவுக்கு இன்று இளையோர் மதுபானங்களுக்கு குறிப்பாக பியருக்கு அடிமையாகியுள்ளனர்.

'பியர் எங்கள் உயிருக்கும் மேல்', 'பியர் அடிப்போர் வாழ்வர் மற்றதெல்லாம் அடிப்போர் குடலழிந்து சாவர்', 'குடி குடியைக் கெடுக்கும் பியர் நட்பை வளர்க்கும்', 'பியர் அடிப்பவனே நாட்டின் சிறந்த குடிமகன்', 'பியருக்கும் அமுதென்று பெயர்' என்பது போன்ற சிந்தனைத் துளிகளை இளையோர் அள்ளி வீசும் அளவுக்கு பியர் அவர்களுடன் ஒன்றரக் கலந்து விட்டது.

பியர் என்பது உலகின் பழைமை வாய்ந்த மிக அதிகமாக உட்கொள்ளப்படும் மதுபானமாகும். நீர், தேநீருக்கு அடுத்தபடியாக அதிகமாக பியரே உட்கொள்ளப்படுகின்றது. தானியங்களிலிருந்து பெறப்பட்ட மாப்பொருளை நொதிக்க வைப்பதன் மூலம் பியர் தயாரிக்கப்படுகின்றது. இதற்குத் தேவையான மாப்பொருள் பார்லி முளைக்கூழிலிருந்து பெறப்படுகின்றது. அத்துடன், கோதுமை, சோளம், அரிசி போன்றவையும் பயன்படுத்தப்படுகின்றது.

அதிகமான பியர் வகைகளுக்கு 'ஓப்' தாவரத்தின் பூக்களை சுவையூட்டிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன், பட்சிலை பழங்கள் போன்றவைகளும் சில பியர்களுக்கு சுவையூட்டிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் பியர் உடல்நலத்திற்கு பெரிதாக கேடு விளைவிக்காத பானமாக உள்ளபோதும் 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாவது வழமை தானே'.

இலங்கையில் 15 வயதிற்கு மேற்பட்ட ஆண்களைப் பொறுத்தவரையில் 15 பேரில் ஒருவர் மதுப்பழக்கம் உடையவராக இருக்கிறார் என்று தெரியவந்திருக்கிறது. உலகில் பிரான்ஸுக்கு அடுத்தபடியாக குடிகாரர் விகிதத்தை அதிகளவாகக் கொண்ட நாடாக இலங்கையே காணப்படுகின்றது.

நண்பனின் பிறந்த நாள், கல்யாண வீடு, சம்பள உயர்வு, அல்லது பரீட்சையில் அதிக புள்ளி எடுத்தாலும் பியர் பார்ட்டி, நண்பனின் காதல் தோல்வி, பரீட்சையில்



தோல்வி, வேலையில்லாக் கவலை, நண்பனின் உறவினர்களின் இழப்பு என்றாலும் பியர் பார்ட்டி. அதுமட்டுமன்றி நண்பனின் உறவினர்களுக்கு நன்மை, தீமை நடைபெற்றால் கூட பியர் பார்ட்டி வைக்கும் அளவுக்கு நிலைமை வந்துள்ளது.

சம்பளம் கையில் கிடைத்தவுடன் நண்பர்கள் உட்கார்ந்து பேசும் இடமாக மதுபானசாலைகளே காணப்படுகின்றன. இன்று சுற்றுலாக்களுக்கு புறப்படும் போது கூட ஆடைகள், தேவையான பொருட்களைத் தேடிக்கொள்கிறார்களோ இல்லையோ பியர் போத்தல்களையும் ஏனைய மதுபான வகைகளையும் சேர்ப்பதிலேயே அதிக கவனம் செலுத்துகின்றனர்.

பொதுவிடுமுறை நாட்களில் மதுபானங்களை விற்கக்கூடாதென அரசு தடை விதித்துள்ளதால் அதற்கு முதல் நாளே அவற்றை வாங்கி சேமித்தோ அல்லது பதுக்கியோ வைத்து அன்றைய தினம் அதனை அருந்தி 'புளகாங்கிதம்' அடைகின்றார்கள்.

நண்பர்கள் சிலர் சேர்ந்தால் முதலில் பேசுவது 'பியர் அடிப்போமா?' என்பதாகவேயுள்ளது. ஆண்கள் மட்டுமன்றி தற்போது பெண்களும் சர்வசாதாரணமாக பியர் பழக்கத்திற்குள்ளாகியுள்ளனர். அதிலும் நகரத்து கல்லூரி மாணவிகள் இதில் முன்னிலை வகிக்கின்றனர். குறிப்பாக விடுதிகளில் தங்கியுள்ள மாணவிகளில் பலர் பியர் அருந்தக் கற்றுள்ளனர். பியர் அருந்தினால் மேனி பளபளக்கும், உடல் அழகாகும், தேகம் பெருக்கும், என்பது போன்ற காரணங்களினாலேயே தாங்கள் பியர் அருந்துவதாக சில மாணவிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது குடாநாட்டிலும் மதுபானசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள அதேவேளை, மதுபான விற்பனையும் 'சூடு' பிடித்துள்ளதாகவே தெரிகின்றது. அதிலும் நடந்து முடிந்த பொதுத் தேர்தலை முன்னிட்டு இடம்பெற்ற பிரசார நடவடிக்கைகளின் போது மதுபான வகைகளே 'ஆறாக' ஓடியதாகவும் கூறப்படுகின்றது. இருள் சூழ்ந்த வேளைகளில் குடாநாட்டு மதுபானசாலைகளில் இளைஞர்களை அதிகளவில் காணமுடிகின்றது. மிகக் குறைந்த வயதினர் கூட இங்கு நிற்கின்றனர்.

அண்மையில் யாழ்நகரிலுள்ள ஒரு பகுதியில் மதுபானம் அருந்திய 10 வயதுக்கு உட்பட்ட சில சிறுவர்களுக்கு அறிவுரை கூறிய முதியவர் ஒருவர் அச்சிறுவர்களினால் மிக மோசமாகத் தாக்கப்பட்டு உயிராபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்ட சம்பவமும் நடந்துள்ளது. அதுதவிர பல பொது நிகழ்வுகளில் குடிமகன்களால் பல மோதல்களும் ஏற்பட்டுள்ளன.

முதலில் மதுப்பழக்கத்தில் பியரில் ஆரம்பிக்கும் இளையோர் பின்னர் அதன் தரத்தை உயர்த்திச் சென்று மிக மோசமான மதுபானங்களை அருந்தும் அளவுக்குத் தம்மை அடிமையாக்கிக் கொள்கின்றனர். மது எமக்கு அடிமையாக இருக்கும் வரை எமக்கு எந்த ஆபத்துமில்லை. ஆனால், மதுவுக்கு நாம் அடிமையாகி விட்டால் நாம் எமது எதிர்காலம் மட்டுமன்றி எமது குடும்பத்தின் எதிர்காலமும் பாழாகி விடும் என்பதை பலர் ஒரு கணம் கூட நினைத்துப்பார்ப்பதில்லை.

இன்றைய காலகட்டத்தில் பியர் அடிக்காதவன் முழு மனிதனல்ல என்ற சித்தாந்தத்தையே இவர்கள் உருவாக்கிவிட்டார்கள். மது, மாது, புகை ஆகிய மூன்று பழக்கங்களும் இருந்தால் தான் அவன் முழுமனிதனெனக் கூறி தமது செயலுக்கு தாமே நியாயம் கற்பிக்கின்றனர்.

மதுவினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக இவர்கள் சிந்தித்துச் செயற்படுவார்களேயானால் தமது எதிர்காலத்தைப் பாதுகாப்பது மட்டுமன்றி நல்லதொரு எதிர்கால சமுதாயத்தையும் உருவாக்க முடியும் என்பதை இன்றைய இளையோர் கருத்தில் கொள்ள வேண்டும். சில மணிநேர போதைக்காக தமது வாழ்நாளில் பல வருடங்களை இழந்து வருகின்றோம் என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் குதிரை



கண்களை எந்தப் பக்கமும் திருப்புதல்,குதிரை போன்ற முக அமைப்பு,குரங்கு போன்ற வால், ஆண் இனங்களே இனப்பெருக்கம் செய்தல் இப்படியாகப் பல்வேறு சிறப்புகளையுடைய அரிய வகை கடல்வாழ் உயிரினம் கடல் குதிரை. கடல் குதிரைகளின் வால் குரங்கின்வால் போல் நீண்டும் சுருண்டும் காணப்படுகின்றது. இந்த வாலின் மூலம் கடல் தாவரங்கள்,கடற் பஞ்சுகள் போன்ற வற்றைப் பற்றிக்கொண்டிருக்கும்.

முதுகுத் துடுப்பினைப் பயன்படுத்தி பெரும்பாலும் குதித்துக் குதித்தும் செல்லும் மீன் இனமாகும்.

சுமார் 6 செ.மீ. முதல் 17 செ.மீ.வரை நீளமும் எடை 4 கிராம் முதல் 14 கிராம் வரையும் இருக்கும். பிற விலங்குகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள கடற்தாவரங்களுக்குள் மறைந்து கொள் கின்றன. கண்கள் சிறியதாக இருந்தாலும் எந்தப் பக்கமும் திருப்பிக் கொள்ளும் வசதியுடையது. தனக்குத் தேவையான மிதவை நுண்ணுயிரிகளை உறிஞ்சி வடிகட்டி உண்ணும் தன்மையுடையது.

பெண்ணினம் தங்களின் முட்டைகளை ஆண்களின் வால் பகுதியில் உள்ள இனப்பெருக்கப் பைகளில் விட்டுவிடும். அதனை ஆண் கடற்குதிரைகள் கங்காரு போல நன்கு பேணி 6 வாரங்கள் பாதுகாத்து குஞ்சுகளைப் பொரிக் கின்றன. குஞ்சுகளின் எண் ணிக்கை 50 முதல் 100 வரை இருக்கும். பிறக்கும் குஞ்சுகளின் மூலம் ஏறத்தாழ ஒரு செ.மீ. ஆக இருக்கும். இதன் விலை கிலோ வுக்கு 6 ஆயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபா வரையுள்ளது. சிங் கப்பூர்,சீனா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றின் மூலம் ருசிமிகுந்த சாறு வகைக ளும் மருத்துவப் பொருட்க ளும் தயாரிக்கப்படுகின்றன.

குழந்தைகளுக்கு உண்டா கும் கக்குவான் இருமலுக்குச் சிறந்த மருந்தாகவும் பயன்ப டுகிறது. உலர்ந்த கடற்குதி ரையை வறுத்து அதன் தூளை தேனில் கலந்து குழந்தைகளுக்கு மருந்தாகக் கொடுத்து வருகின் றனர். தேங்காயெண்ணெயைக் கலந்து வெட்டுக்காயங்களுக்கும் மருந்தாக உபயோகிக்கப்படுகி றது. ஆஸ்துமாவுக்கும் சிறந்த மருந்தாக இருப்பதால் உலகளவில் இதன் தேவை அதிகமாகியுள்ளது.




## தெரிந்துகொள்ளுங்கள்!

* இந்தியாவில் மிதக்கும் தபால் நிலையம் காஷ் மீரில் உள்ள ஏரி நிலையமாகும்.

* சூரியனில் இருந்து ஒளிக்கதிர்கள் பூமியை வந் தடைய சுமாராக 8 நிமிடங்கள் ஆகும்.

* செடியிலிருந்து பறிக்கப்பட்ட பிறகு பழுக்காத ஒரு சில பழவகைகளில் ஆரஞ்சு பழமும் ஒன்று.

* லண்டனில் உள்ள பிரிட்டிஷ் நூல் நிலையத் தில் ஏறக்குறைய 32 ஆயிரம் தமிழ் நூல்களும் 200 தமிழ் ஏட்டுச்சுவடிகளும் உள்ளன.

* நாள்தோறும் நம் கண்களில் 13 சொட்டு கண் ணீர் சுரக்கிறது. அதில் 7 சொட்டுகள் ஆவியாகிறது. மீதி 6 சொட்டுகள் மூக்குக்குச் செல்கிறது.

# குறுக்கெழுத்துப்போட்டி - 28

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ✱ |
| 6 | 7 | ✱ | 8 | 9 | 10 |
| ✱ | 11 | 12 | 13 | ✱ | 14 |
| 15 | ✱ | ✱ | ✱ | 16 | 17 |
| 18 | 19 | ✱ | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | ✱ | 26 | ✱ |

**இடமிருந்து வலம்**

1. நகரம்
6. மீன்களுக்குள் இருப்பது (திரும்பியுள்ளது)
8. பாம்புகளில் விஷம் கூடியது (குழம்பியுள்ளது)
11. சேலைகளில் இந்த வகை பெறுமதி கூடியது (திரும்பியுள்ளது)
16. தாய் 10 மாதம் சுமப்பது
18. பிணி என்றும் சொல்லலாம்
20. கோழை என்பதன் எதிர்ப்பதம்
23. இது கூவும் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. கற்பக தரு
2. ஒரு குருவி வகை (குழம்பியுள்ளது)
4. இது பாதாளம் வரை பாயும் (குழம்பியுள்ளது)
5. நான் என்பதன் பன்மை (தலைகீழ்)
10. பாம்பின் எதிரி (குழம்பியுள்ளது)
15. 7 துறைகளில் வழங்கப்படும் உலகப்புகழ் விருது (குழம்பியுள்ளது)
16. காட்டு விலங்கு ஒன்று
19. குழந்தை என்றும் சொல்லலாம் (தலைகீழ்)

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

## குறுக்கெழுத்துப்போட்டி - 26 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. ஐ.பி.எல். | 1. ஐயம் |
| 4. திரி | 4. ரதி |
| 7. தாரகை | 5. காரிகை |
| 10. மயானம் | 7. தாமரை |
| 16. மரை | 11. புவனம் |
| 18. தவணை | 17. மனு |
| 21. ஆறு | 20. கணை |
| 23. புகழ் | 22. ஆனி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**நந்திகா கந்தையா,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

## பாராட்டுப்பெறுவோர்

01. எஸ்.ரி.கேதீஸ், இல. 23, டச் வீதி, சாவகச்சேரி.

02. ச.சிவகுமார், விஸ்வகுல வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறை.

03. வி.செல்வநாயகம், சிவன் கோவில் வீதி, புத்தூர்.

04. ஞா.செந்தமிழ்ச்செல்வன், குப்பிளான் தெற்கு, ஏழாலை.

05. ஞா.நளினி கைதடி மேற்கு, கைதடி.

உங்கள் விடைகளை
**'Saturday மெயில்'**
**இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்**
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

# விடுகதை

1. விளக்கைச் சுமந்து வேகமாய் பறந்திடு வான். அது என்ன?
2. விதையின்றி வளர்ந்திடுவான்; வேரின்றி நின்றிடுவான். அது என்ன?
3. நம்மைச் சுமக்கும் இவனுக்கு வீட்டிற் குள் இடமில்லை. அது என்ன?
4. வெள்ளைக்கார சீமாட்டி நெருப்பில் கரைந்திடுவாள். அவள் யார்?
5. நம் காலில் விழுந்திடுவான். கவன மின்றி இருந்தா நம்மைத் தூக்கி அடித்திடு வான். அது என்ன?
6. வெள்ளி உடம்புக்காரி. பிடித்தால் வழுக்கி விடுவாள். அவள் யார்?
7. பந்திக்கு வரும் முந்தி; வெளியே போகும் பிந்தி. அது என்ன?
8. கழுத்து உள்ளவனுக்கு தலையில்லை. கை உள்ளவனுக்கு கால் இல்லை. அது என்ன?
9. பார்க்க சிறிதானவன்; ஓசையோ பெரிதா னவன். அவன் யார்?
10. உயர்ந்து வளர்ந்தவன்; தனது பச்சைத் தோகையை விரித்தாடுவான். அவன் யார்?
11. அண்ணன்-தம்பி இருப்பதோ ஒரே இடம்; ஆனால், அண்ணன் ஓடுவதோ படு வேகம். அது என்ன?
12. கருப்பு உடலுக்காரனுக்கு பச்சை நிறக் கூந்தல். அது என்ன?
13. சின்னச் சின்ன சிங்காரி; அவளை சுற்றி சேலை அடுக்கு. அது என்ன?
14. நீரில் செல்லாத கப்பல்; நிலத்தில் செல் லும் கப்பல். அது என்ன?

1. மின்மினிப்பூச்சி
2. காளான்
3. செருப்பு
4. மெழுகுவர்த்தி
5. கடல் அலை
6. மீன்
7. வாழையிலை
8. சட்டை
9. [illegible]
10. தென்னைமரம்
11. கடிகார முட்கள்
12. [illegible]
13. வெங்காயம்
14. ஒட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையில் முகிழ்ந்த தளிரிளம் செல்வங்கள்

அராலியூர் மல்லிகை

பூவியெனும் பூங்காவில் நடமாடும் உயிர்ப் பூக்களாய் ஒளிர்ந்திடும் செல்வங்கள் மழலைகள். இத்தகு மழலைச் செல்வங்களுடன் மகிழ்ந்தாடியிருக்கிற கணங்களுக்கு நிகர் உலகில் எதுவுமேயில்லை. பெற்றோர்க்கு மருந்தாயும் கவிகளுக்கு கவிவிருந்தாயும் அமையும் பிள்ளைச் செல்வத்தின் உயர்வை அகநானூறு, புறநானூறு, திருக்குறள் முதலான பழந்தமிழ் இலக்கியங்கள் எழிலுற எடுத்தியம்பியுள்ளன.

வடமொழியில் 'புத்திரன்' என்று அழைக்கப்படும் இச் சொல்லுக்கு நிகரான சொல் தமிழில் இல்லை. புத்- நகத்தை நீக்குகிறவன் என்று பொருள்படும். இதே பொருள் சார்ந்த சொல் தமிழில் இல்லை. புத்திரன் செய்யும் சடங்குகளால் தான் பிதிர்கள் இன்பமடைய முடியும் என்பது புராணக் கொள்கை. இது பழங்காலச் சீனமக்களிடமும் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழரின் தனிப்பெரும் கொள்கையாக இது வேரூன்றியிருந்தமையைக் காண முடிகின்றது.

**'இம்மை உலகத்து இசை**
**யொடும் விளங்கி**
**மறுமை உலகமும் மறு**
**வின்று எய்துப,**
**செறுநரும் விழையும் செயிர்**
**தீர் காட்சிச்**
**சிறுவர் பயந்த செம்மலோர்**
**எனப்**
**பல்லோர் கூறிய பழமொழி**
**எல்லாம்**
**வாயே யாகுதல் வாய்த்த**
**னம்' (அகநானூறு பாடல்:66)**

'பிள்ளையில்லார்க்குப் புண்ணிய லோகம் இல்லை' என்ற பழமொழியை இப்பாடல் நினைவூட்டுவதைக் காண முடிகின்றது. அதாவது, பிள்ளைச் செல்வத்தையுடையோர் இம்மையுலகிற் புகழோடும் விளங்கி மறுமையுலகிலும் குற்றமின்றி வாழ்வர் எனக் கூறுகின்றது. இதே கருத்துப்பட அமைந்த வள்ளுவர் குறளை நோக்குவோம்.

**'எழுபிறப்பு தீயவை தீண்டா**
**பழிபிறங்காம்**
**பண்புடை மக்கள் பெறின்'**
**(குறள்-62)**

பழியில்லாத நல்ல பண்புடைய மக்களைப் பெற்றால் ஒருவனுக்கு ஏழுபிறவியிலும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்றுசேரா என வள்ளுவர் கூறியுள்ளார்.

தங்கத் தமிழரின் மங்காப் புகழினை எடுத்தியம்புவதில் ஒப்பற்று விளங்கும் நூலாகிய புறநானூற்றில் வருகின்ற பின்வரும் பாடல் காலமுள்ளளவும் நின்று நிலைக்கும் பேறு பெற்றது. நவில்தொறும் நாவினிக்கும் தன்மை வாய்ந்தது. அதனை நோக்குவோம்.

**'படைப்புப் பல படைத்துப்**
**பலரோடுண்ணும்**
**உடைப் பெருஞ் செல்வ**
**ராயினும் இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை**
**நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வி**
**யும் துழந்தும்**
**நெய்யுடை யடிசில்**
**மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்**
**லோர்க்குப்**
**பயக்குறை யில்லைத்**
**தாம் வாழ நாளே' (புறநா**
**னூறு-பாடல் : க.அ.அ)**

அறிவுடைய நம்பி பாடிய இப்பாடல் வள்ளுவரின் பின் வரும் குறளை நினைவூட்டுகின்றது. புறநானூற்றில் அவர் விரித்துக் கூறியதை வள்ளுவர் ஈரடிகளில் சுருக்கிக் கூறியிருப்பதைக் காணலாம்,

**'அமிழ்தினும் ஆற்ற**
**இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்'**
**(குறள்-64)**

இங்கே 'அளாவிய' என்ற சொல் உயிர்த்துடிப்பு மிக்கதாக விளங்குகின்றது. பிள்ளைகள் உணவுண்கின்ற முறைமையை அப்படியே காட்சிப்படுத்துகின்றார் வள்ளுவர். அவர்கள் தமது பிஞ்சுக்கரங்களால் உணவினை எடுத்து உண்கின்ற அழகினையே பார்த்துக் கொண்டிருக்கின்ற துன்பமெல்லாம் தூர விலகி ஓடும். மூக்கில், வயிற்றில், காலில் என அவர்கள் அழைந்தெடுத்து உண்கின்ற உணவே, பெற்றோர்க்கு அமிழ்தினும் இனிமை பயப்பன என இரு படைப்பு மனங்களும் சுட்டியிருப்பதைக் காண முடிகின்றது.

இத்தகைய மழலையரின் சிரிப்பொலிக்கு நிகரான சங்கீதம் உலகெங்கிலும் காண முடியாது. இவர் தம் சிரிப்பில் உண்டாகும் இராகத்தில் தெய்வீகம் பிறக்கின்றது. இந்த இசையை அனுபவிக்காத நெஞ்சங்கள் தான் குழலிசை இனிதென்றும் யாழிசை இனிதென்றும் கூறுகின்றன. இதனை வள்ளுவர்,

**'குழலினது யாழினது**
**என்பதம் மக்கள்**
**மழலைச் சொல் கேளா**
**தவர்' (குறள்-66)**

என அழகாக எடுத்தியம்பியுள்ளார்.

தாய்மையில் முகிழ்த்த தளிரிளம் செல்வங்களாய் திகழும் இம் மழலையரில் இறைவன் வாசம் கொள்கின்றான். இதனை 'இறைவன் சிரிக்கிறான், குழந்தை வடிவிலே', 'குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று', 'மழலையர் உள்ளம் இறைவனின் இல்லம்' முதலான வாசகங்களில் தரிசிக்கலாம். ஒவ்வொரு வீட்டிலும் பேசும் பூவாகவும் ஒளி ரும் நிலவாகவும் திகழும் மழலையற் பெருமை பற்றிப் பாடாத நூல்களே இல்லை எனலாம். எனினும், அவற்றையெல்லாம் விஞ்சி நிற்கும் உயிர்ப்புத்தகமாய் 'மழலையர்' விளங்குகின்றனர். இதனை,

**'இன்பக் கதைகள் எல்**
**லாம் உன்னைப் போல**
**ஏடுகள் சொல்வ**
**துண்டோ'** எனப் பைந்தமிழ்ப் பாவலன் பாரதி கூறியதை இங்கு சுட்டற்பாலது.

உலகின் உயர்ந்த செல்வம் 'தாய்மை' அந்த உயர்வில் முகிழ்த்த மலர்கள் சேய்கள். பெண்ணுக்குப் பெருமை சேர்ப்பதும் இரு சேய்களே! இவர்களைக் காலமுள்ளளவும் இலக்கியங்கள் தாலாட்டும்.

## இலக்கிய சுவை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுறா-விஜய், தமன்னா

## விஜய் கொடுத்த வாய்ப்பை மறுத்த இயக்குநர்கள்

பொலிவூட்டில் சக்கை போடு போட்ட த்ரீ இடியட்ஸ் படத்தை தமிழில் எடுக்கப் போகிறார்கள். இதில் நடிக்க முதலில் ஓகே சொன்னவர் சிறிது காலமாக 'அடிதடி ஆக்ஷன்' மீது மட்டுமே நம் பிக்கை வைத்திருக்கிற விஜய். இந்த மாற்றம் கொலிவூட்டில் குஷியை கிளப்பிவிட, விஜய் சொன்ன இயக்குநர்கள் பட்டி யல் இருக்கிறதே... அது கஜினி முகமதுகளின் கவலையைப் போக்கிய கம்பீரப் பட்டியல். சூப்பர் ஹிட் கொடுத்த இயக் குநர்களாக இருந்தாலும் கூட தொடர் வெற்றி இல்லையென் றால் பேக்கப் சொல்லிவிடுகிற காலம் இது. இதில் தரணி, விஷ்ணுவர்தன் போன்ற பிரபல இயக்குநர்களுக்கும் கூட பிரச்சினை. இந்த நேரத் தில்தான் தான் நடிக்க விரும் பும் த்ரீ இடியட்ஸ் படத்திற்கு இவ்விரு இயக்குநர்களையும் சிபாரிசு செய்தாராம் விஜய். ஆனால், இந்த வாய்ப்பை ஒப் புக்கொள்ள முடியாதளவுக்கு இரண்டு பேருக்குமே இழுபறி. என்னவாம்? தெலுங்கில் 35 கோடி பட்ஜெட்டில் ஒரு படத்தை இயக்கி வருகிறாராம் தரணி. இந்த நேரத்தில் நம்மால் முடியாது என்று அவர் ஒதுங் கிக் கொண்டாராம். விஷ்ணு வின் பிரச்சினை வேறு மாதிரி. இவர் கேட்ட சம்பளம் தயாரிப் பாளர்களுக்கு ஆகவில்லை. எனவே விஜயின் தெரிவு வேறு யாரை நோக்கி? கோடம் பாக்கமே ஆவலோடு காத்திருக் கிறது.

## பிரசாந்த் தங்கையாக சிநேகா



முதல் படத்தில் பிரசாந்துடன் ஜோடி போட்ட சிநேகா, காலம் உருட்டிய உருட்டலில் அவ ருக்கே தங்கையாக நடிக்கிறாராம். இடை யில் யார் யாருடனோ ஜோடியாக நடித்த வருக்கு மீண்டும் பிரசாந்துடன் டூயட் பாடுகிற யோகம் அமையவே யில்லை. ஒருநாள் திடீரென்று கலைஞரின் 'பொன்னர் சங்கர்' படத்தில் நடிக்க சிநேகாவை அழைத்தாராம் படத்தின் இயக் குநரும் பிரசாந்தின் தந்தையு மான தியாகராஜன். ஆவலாக வந்த சிநேகாவுக்கு நாவலாக ஒரு வேடம் சொன்னார் மம்பட் டியான். பிரசாந்துக்கு தங்கை என்று. ஆனாலும் கதையும் அதில் இவ ருக்கு இருக் கிற முக் கியத்துவமும் சிநேகாவைக் கரைத்துவிட, அந்த இடத்தி லேயே முற்பணத்தை வாங்கிக் கொண்டாராம். இது ஒருபுறம் இருக்கட்டும். உலக அழகி ஐஸ் வர்யாராயோடு ஜோடி சேர்ந்த போது கூட இத்தனை பட்ஜெட் டில் எடுக்கப்படவில்லை அந்தப் படம். பிரசாந்த் நடிக்கும் இந்தப் படத்தை 40 கோடி செலவில் எடுத்துக் கொண்டிருக்கிறார் தியாகராஜன். அரண்மனை, அரங்கு, ஆள், அம்பு, படைகள் என்று சரித்திர சம்பவங்க ளுக்கே தூட்டு தண்ணீராகச் செலவாகிறதாம்.



காவேரிஜா

Saturday சினிமா

## தடுக்கி விழுந்த் வடிவேலு



சுறா படத்தின் ஓடியோ வெளியீட்டு விழா வேடி ஆண் டாள் பள்ளியில் சில தினங் களுக்கு முன் நடந்தது. அந்த விழாவில் கலந்து கொண்ட வடிவேலு திடீரென்று வயர் தடுக்கிக் கீழே விழ, அத்தனை பேருக்கும் அதிர்ச்சி. நாலைந்து கமராவை வைத்து நிகழ்ச்சி யைப் படம் பிடித்துக் கொண்டிருந்தார் கள். மேடையில் இவரது பெயரைச் சொன்னதும் ஆர்வத்தோடு எழுந்து ஓடிய வடிவேலு, கீழே தரையில் கிடந்த கமரா வயர்களைக் கவனிக்க வில்லை. அப்படியே சர்ஷ் டாங்கமாகக் கீழே விழுந்தார். நல்லவேளையாக முகத்தில் காயம் ஏதுமில்லை. விழுந்த வேகத்தில் எழுந்த வடிவேலு, ஒன்றும் சதியில்லையே என்று கேட்டுச் சிரித்துவிட்டு அதே வேகத்திலேயே மீண் டும் மேடைக்கு ஓடினார்.

அந்த எலும்பு கடிக்கிற முன் னாள் நடிகர் இன்னமும் தனது பழைய நம்பிக்கையை விட்டுத்தர மறுக்கிறாராம். சமீபத்தில் இளைய நாயகனுடன் ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கும் அவர் கேட்ட சம்பளம் எவ்வளவு தெரி யுமா? ஒன்றரைக் கோடி! 'இஷ்டம் இருந்தா வாங்க இல்லைன்னா போங்க' என்ற அவரது கறார் பேச்சுக்குத் தயா ரிப்பாளர் சரண்டராம்.

சின்னத்திரை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டால் மார்க்கெட் போய்விடும் என்ற அசட்டு நம்பிக்கையை உடைத்தவள் நான் என்கிறார் நமீதா. அந்த நிகழ்ச்சி யில இவரப் பார்த்தா மனசாடும், மைண்ட் ஆடும்.....



பழகிய கொஞ்ச நாட்களிலேயே மனசைக் கவர்ந் [illegible] கார்த்திக் என்கிறார் [illegible] புலி வேஷம் [illegible] இவரு டன் நடிக்கும் கார்த்திக் பற்றி இவர் [illegible] பட்டதே இல்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிக்க வைக்கும் மதராசப்பட்டினம்


மதராசப்பட்டினம்-ஆர்யா, ஏமி ஜாக்சன்

பீரியட் பிலிம் எடுக்க ஒரு தில் வேண்டும். அது இயக்குநருக்கு மட்டும் இருந்தால் போதாது. பணம் போடுகிற தயாரிப்பாளருக்கும் வேண்டும். மதராசப்பட்டினம் படத்தில் இருவருக்குமே அந்த தில் இருப்பது ஒவ்வொரு அசைவிலும் தெரிய வைத்திருக்கிறார்கள். ஓடியோ வெளியீட்டு விழா அழைப்பிதழில் தொடங்கி, விழா வரைக்கும் மிரட்டலோ மிரட்டல்! தனது குழுவோடு பத்திரிகையாளர்களைச் சந்தித்த படத்தின் இயக்குநர் விஜய், மதராசப்பட்டினம் வளர்ந்த கதையைச் சொல்லச் சொல்ல பிரமிப்பு. 1940 களில் சென்னை எப்படியிருந்தது? படத்தின் மிக முக்கியமான களம் இது. இதற்காக கலை இயக்குநர் செல்வகுமாரிடம் சொல்லி பிரமாண்டமான அரங்குகளைப் போட்டாராம். கேளம்பாக்கத்தில் ஒரு பெரிய இடத்தையே வளைத்துப் போட்டு சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனையும், மவுண்ட் ரோடையும் உருவாக்கினாராம். அவ்வளவு ஏன்? இப்போது கூவம் என்று சொல்லப்படுகிற பக்கிங்காம் கால்வாயைக் கூட உருவாக்கியிருக்கிறார்கள் என்றால் பிரமித்துக் கொள்ளுங்களேன். முதலில் இந்தக் கதையை விஜய் எங்கிட்ட சொன்னார். கேட்டவுடனேயே பிடிச்சிருந்தாலும், ஆகிற செலவு என் படங்களுக்கான வியாபாரத்தை விட 5 மடங்கு அதிகமாக இருந்திச்சு. இருந்தாலும் கல்பாத்தி அகோரத்திடம் இந்தக் கதையைக் கேளுங்க என்றேன். கேட்டவுடன் பட்ஜெட்டை கவலைப்படாதீங்க. பார்த்துக்கலாம் என்றார். அவரு இல்லேன்னா இந்தப் படம் இல்லை என்றார் ஆர்யா. சலவைத் தொழிலாளியாக இப்படத்தில் நடித்திருக்கிறார் இவர். இங்கிலாந்திலிருந்து ஏமி ஜாக்சன் என்ற அழகியைப் பிடித்து வந்து நாயகியாக்கியிருக்கிறார் விஜய். இளவரசியே இறங்கி வந்த மாதிரி இருந்தார் ஏமி.

நயன நடிகையும், நடன கலைஞரும் புது மண ஜோடிகள் போலவே நடந்து கொள்கிறார்கள். சமீபத்தில் வெளிநாடுகளுக்கு தேனிலவு சென்ற இந்த ஜோடி. தற்போது நெருக்கமான சினிமா புள்ளிகளின் வீட்டுக்கு விருந்துக்கு ஜோடியாகச் சென்று வருகிறார்கள். இந்த இரகசிய விசிட் பற்றித் தெரிந்த நடன கலைஞரின் முதல் மனைவி கோபத்தில் குமைந்து கொண்டிருக்கிறார்.

உச்ச நட்சத்திரத்தின் பிரமாண்டப் படத்தை இந்தியாவே எதிர்பார்க்கிறது. பிரமாண்ட இயக்குநரின் சயின்ஸ் பிக்சன் என்பதால் படம் எப்படியிருந்தாலும் ஒருமுறை பார்த்தாக வேண்டும் என்ற முடிவில் இருக்கிறது தமிழ் ஜனம். இதுவரை வந்த தமிழ்ப் படங்களின் வசூல் சாதனைகளை இப்படம் நொறுக்கும் என உறுதியாக நம்புகிறார்கள் விமர்சகர்கள். இந்நிலையில், தனது 51 ஆவது படத்தை உச்சத்தின் படத்துடன் மோதவிடும் முடிவில் இருக்கிறாராம் இளைய சேனாதிபதி. மலையாள இயக்குநர் இயக்கும் இப்படத்தின் வேலைகள் சேனாதிபதியின் விருப்பம் காரணமாக முடுக்கிவிடப்பட்டுள்ளன. யானையோடு புலி மோதலாம். எலி மோதலாமா? சேனாதிபதியின் உடனிருப்பவர்களே முணுமுணுக்கிறார்கள்.

சென்னையில் கிரிக்கெட் நடக்கும் போது மாறுவேடத்தில் ரகசியமாக ஸ்டேடியத்துக்கு விசிட் அடிக்கிறார், கப்டனுடன் கிசுகிசுக்கப்பட்டராய் நடிகை. கிரிக்கெட்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். நேரடியாகப் போனால் தேவையில்லாமல் கப்டனுடன் இணைத்து கிசுகிசு எழுதுவார்கள். அதனால் தான் மாறுவேடத்தில் போகிறேன் என்று விளக்கம் கொடுத்துள்ளார் நடிகை.

## அண்ணன் நாயகன்–நான் வில்லன்–கார்த்தி


சிங்கம்-சூர்யா

மூன்றே படங்கள். ரசிகர்களைக் கொத்தாக அள்ளிப் பொக்கெட்டில் வைத்துக் கொள்கிற அளவுக்கு வளர்ந்திருக்கிறார் கார்த்தி. வளர வளர தொழில் மீதான அக்கறையும் ஆர்வமும் வந்திருப்பதை அவரது பதிலில் காண முடிகிறது. பையா படம் குறித்து பத்திரிகையாளர்களிடம் பேச வந்தவர் அதையும் தாண்டி பல கேள்விகளுக்குப் பதில் சொன்னது சுவாரஸ்யம். முக்கியமாக தமன்னா! இவருக்கும் அவருக்கும் இருக்கிற ‘அது’ குறித்துத் தான் நிறையக் கேள்விகள். ஆனால், ‘அதெல்லாம் இல்லீங்க’ என்றே முடிந்தது எல்லாப் பதில்களும். ‘அவங்க அழகான நடிகை, தொழில் மீது அவ்வளவு அக்கறை, கொஞ்ச நேரம் கூட சும்மாயிருக்க மாட்டாங்க. அடுத்து என்னோட வசனம் என்ன? எப்படி நடிக்கணும்னு கேட்டுகிட்டேயிருப்பாங்க’ என்று தமன்னா பற்றிப் பேசியவரிடம் ‘இப்படித் தான் சூர்யாவும் ஆரம்பத்துல ஜோதிகா பற்றிச் சொன்னார்’ என்று மடக்கினார் நிருபர் ஒருவர். ‘ஐயய்யோ.. நான் இந்த விளையாட்டுக்கு வரலீங்க’ என்று கார்த்தி விலகி ஓடியது பொய்யாகப் படவில்லை. ‘உங்க அண்ணனோட சேர்ந்து ஒரு படத்தில நடிப்பீங்களா?’ பட்டென்று பதில் வருகிறது கார்த்தியிடம். ‘நிச்சயமா அப்படி ஒரு ஆசை இருக்கு ஆனா, அங்கேயும் அண்ணன் தம்பியா நடிக்கறது சுத்தபோர். வேணும்னா நான் வில்லனாவும் அவரு நாயகனாகவும் நடிக்கலாம். பார்ப்போம்’ என்றார். ‘மறுபடியும் அமீர், செல்வராகவன் மாதிரி இயக்குநர்களோட நடிக்கிறது ரொம்பக் கஷ்டங்க. இரண்டு வருஷம் மூணு வருஷம் என்னால காத்திருக்க முடியாது. வயசாகிறதுக்குள்ளே நிறையப் படம் நடிக்கணும். நானும் சம்பாதிக்கணும், கல்யாணம் பண்ணிக்கணுமில்லையா? 6 மாதத்தில் படத்தை முடிக்கிற மாதிரி நல்ல கதைகள் உள்ள இயக்குநர்கள் வந்தா ஓகே’ என்றார் தெளிவாக. ‘இப்பவும் என் தெரிவு லிங்குசாமிதான்’ என்றார் கொஞ்சம் அழுத்தம் திருத்தமாகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# சானியா மிர்ஷா

டெனிஸில் பெற்ற பாண்டித்தியத்தினால் தனக்கு மட்டுமல்லாமல் முழு இந்தியாவுக்குமே பெருமையையும் சிறப்பையும் தேடிக் கொடுத்த வீராங்கனை சானியா மிர்ஷா. தற்பொழுது திருமண பந்தத்தில் இணைந்து கொள்ள தீர்மானித்துள்ளார்.

ஆனால், தனது வருங்காலக் கணவராக சானியா மிர்ஷா பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொய்ப் மாலிக்கை தெரிவு செய்துள்ளமையால் இந்தியாவில் சில வட்டாரங்களிலிருந்து எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை சொய்ப் மாலிக்கும் தனக்குக்கும் ஏற்கனவே திருமணம் நிறைவடைந்து விட்டதாக ஆயிஷா என்ற வேறொரு பெண் கூறி வருவதால் சானியாவின் திருமணத்தில் மேலும் குழப்பநிலை காணப்படுகின்றது.

ஆனாலும், ஆயிஷாவின் கருத்தினால் தனது திருமணத்தில் எதுவிதமான மாற்றமும் நிகழப்போவதில்லையென சொய்ப் மாலிக்கும் சானியா மிர்ஷாவும் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கூறியுள்ளனர்.

இதேவேளை சொய்ப் மாலிக் மூலம் தான் கருவுற்றதாகவும் ஆயிஷா கூறியுள்ளமை மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

விளையாட்டுத்துறை பத்திரிகையாளரான இம்ரான் மிர்ஷாவுக்கும் நசிமாவுக்கும் 1986 நவம்பர் 15 இல் மும்பையில் பிறந்தார் சானியா.

பின்னர் ஹைதராபாத்தில் வளர்ந்த மிர்ஷா தனது ஆறாவது வயதில் டெனிஸ் விளையாட்டில் ஆர்வம் காட்டினார்.

சானியாவின் தந்தையாலும் குடும்ப உறுப்பினர்களாலும் சானியாவுக்கு ஆரம்பத்தில் டெனிஸ் பயிற்சி வழங்கப்பட்டது.

ஹைதராபாத்தில் உள்ள நாசிர் பாடசாலையில் தனது ஆரம்ப மற்றும் உயர்கல்வியைப் பெற்ற சானியா பின்னர் சென்.மேரீஸ் கல்லூரியில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார்.

தனது 6 வயதில் டெனிஸில் ஆர்வம்காட்டிய சானியா மிர்ஷா தனது 17 ஆவது வயதில் அதாவது 2003 இல் டெனிஸ் போட்டிகளில் விளையாட ஆரம்பித்தார்.

2003 ஏப்ரல் இந்திய பெடரேஷன் கிண்ணக் குழுவில் இணைந்து அனைத்து ஒற்றையர்கள் ஆட்டத்திலும் வெற்றிபெற்றார்.

அத்துடன் கடந்த வருடம் நடைபெற்ற அவுஸ்திரேலிய திறந்த டெனிஸ் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் அப்போட்டியில் வெற்றிபெற்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையை பெற்றார்.

பெண்களுக்கான டெனிஸ் வீராங்கனைகள் தரப்படுத்தல் பட்டியலில் ஒற்றையர் பிரிவில் 27 ஆம் இடத்திலும் இரட்டையர் பிரிவில் 18 ஆம் இடத்திலும் சானியா மிர்ஷா இடம் பெற்றிருந்தார்.

இவ்வாறாக டெனிஸ் விளையாட்டில் சிறந்து விளங்கிய சானியா மிர்ஷாவுக்கு இந்தியாவின் பத்மஸ்ரீ விருது உட்பட பல விருதுகளும் பட்டங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிலையில் 2007 இல் பிரபல முதலீட்டாளர் சோக்ராப் மிர்ஷாவுக்கும் சானியா மிர்ஷாவுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு பின்னர் 2010 ஜனவரியில் அந்த நிச்சயதார்த்தத்தை செல்லுபடியற்றதாக்குவதாக சானியாவின் குடும்பம் அறிவித்தது.

இந் நிலையில் கடந்த மார்ச் 29 இல் சானியா மிர்ஷாவுக்கும் சொய்ப் மாலிக்குக்கும் திருமணம் நடைபெறவுள்ளதாக முதன் முதலில் அறிவிக்கப்பட்டது.

இதனை சானியாவின் தந்தையும் சொய்ப்மாலிக்கும் உறுதிப்படுத்தியதுடன் எதிர்வரும் 15 ஆம் திகதி திருமணம் நடைபெறுமெனவும் தெரிவித்திருந்தனர்.


இந்நிலையில் சானியாவின் திருமணம் குறித்து சர்ச்சைகள் தோன்றியுள்ளன.


இந்நிலையில் ஏப்ரல் 15 இல் இவர்களின் திருமணத்தை எதிர்பார்த்து சர்வதேசத்தின் கவனமும் திரும்பியுள்ளது.

சானியா மிர்ஷா சொய்ப் மாலிக் திருமணம் ஏப்ரல் 15 இல் நடைபெறுமா என்பதை காண அன்றைய தினம்வரை பொறுத்திருப்போம்.

**யோ.நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹைக்கூ கவிதைகள்

என் குழந்தைகளை
கல்லூரிக்கு அழைத்துச் செல்வதும்
திரும்பவும் வீட்டுக்கு
அழைத்து வருவதும்
என் வீட்டுக்கு வேலைக்கு வரும்
குழந்தைகளே...

***

கல்யாணக் கனவோடு
கைநீட்டி வாங்கும்
சம்பளமும் மாதம்
இரு முறை 'டை'
அடிக்கவே பத்தாது

***

பானையை அடுப்பில்
வைத்துவிட்டு
அழுது கொண்டிருக்கிறாள் ஒருத்தி
அரிசி வாங்குவதாயின்
முதலில்-அவள்
பானையை அடகு வைக்க
வேண்டும்

***

அகதி முகாம் என்று...!
பெயர்ப்பலகை
மட்டுமே
அழகாக வர்ணம்
தீட்டப்பட்டிருக்கிறது.

**வி.முகிலன்,நெடுந்தீவு-13.**

## நாணல் தேடும் பறவைகள்...

ஆலம் விழுதினில் ஊஞ்சல்
கட்டி ஆட
ஆசைப்பட்டாலும் முடியாத
யுகம் இது
நாணல் போன்ற மரங்கள்தான்
இங்கு உண்டு
காகிதத்தாலான நாணல் போல
வாழ்ந்திடினும் நாணலைத்தேடி
செல்வோம்,ஆயினும் பறவைகள்
நாணலில் உட்கார முடியாது
அதனை வாங்கும் காலம் இனி
வருமா?

**சிறிதரர் வினித்திரா,**
**கந்த உடையார் ஒழுங்கை,**
**பருத்தித்துறை.**




## உன்னால் முடியும் நண்பா

தளராதே தமையனே,
தரணியிலே தன்னம்பிக்கையுடன்-நீ
தயங்காமல் முயற்சி செய்,
அல்லும்பகலும் அயராது உழைத்துப்பார்
அன்னை அம்பிகையும் அருள்புரிவாள்!
அனைத்துமே உனக்காகத்தான் காத்திருக்கின்றன!
உன்னையே நீ உணர்வாய்!
உண்மையை சொல்லப்போனால்
உன்னை வெல்ல யாருளர் இவ் உலகிலே!
இன்னுமேன் மௌனிக்கின்றாய்?
இன்றே ஆரம்பி உனது பயணத்தை!
இன்னல்கள் வரத்தான் செய்யும்..
படிக்கல்லாய் மாற்றிடு தடைக்கற்களை!
படித்து பட்டம் பெற்று வைத்தியராகிப்
பலருக்கும் சேவை செய்வதுதானே உனது ஆசை?
போனது போகட்டும்-உன் கல்வியைப்
போர்தான் குழப்பிவிட்டதென்றாலும்
போதுமையா உன் கலக்கம்,
நித்தம் நீயும் போராடு போரால்
நிலைகுலைந்த உன் கல்வியை
நிச்சயமாக நிலைநாட்ட முடியும்!
புறப்படு நண்பா பரீட்சையில் உன் பேனாவைப்
புயலாகச்சுழற்றிடு! நாளை நான் மாத்திரமல்ல,இந்நாடே
புகழும் உன்னை

**ஸ்ரீரஞ்சிதா,**
**பிரதான வீதி, வடலியடைப்பு.**

## வெறுப்பு

உன் விழிகளை –நீ
எரிக்கின்றாய்
என் கலங்கரை விளக்கு
அதுதான்
என்பதை புரியாமல் !

## ரசிப்பு

இமாலய கவிஞர்கள்
உலாவும் கவி வானில்
என் கவிதையை...
நானே ரசிக்க...
வேண்டியுள்ளது.

**சா.ரமேஸ்குமார்,**
**மீசாலை கிழக்கு.**

## சாட்சி


அன்பே...!
நம் காதலுக்கு
அந்த வானம் சாட்சி!
வானம் கொண்ட நீலம் சாட்சி!
சூரியன் சாட்சி!
நிலவு சாட்சி!
ஜொலிக்கும் நட்சத்திரம் சாட்சி!
வானத்தில் பறக்கும் பறவைகள்
சாட்சி!
நாம் ஓடி விளையாடிய கடற்கரை
சாட்சி!
கால் நனைத்த கடலலை சாட்சி!
அன்றொரு நாள் பெய்த மழை
சாட்சி!
மழைக்கு ஒதுங்கிய மண்டபம் சாட்சி!
குளிர்காய்ந்த அக்னி சாட்சி!
கதை பேசிய செடி கொடி சாட்சி!
பெயர் பொறித்த மரம் சாட்சி
வெயில் மறைத்த குடை சாட்சி!
கவிதை எழுதிய பேனா சாட்சி!
நீ சாட்சி!
நான் சாட்சி!
இவ்வளவும் இருந்துமா
உன் அப்பாவிடம் என்னைத்
தெரியாது என்றாய்...?

**செ.ரமேஷ்,**
**கரவெட்டி வடக்கு.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இனிமேல் குளியலறையில் கூட நிர்வாணமாக நிற்கமாட்டேன்'



தற்போது இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளில் தனது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வெற்றிபெற்றால் நிர்வாணமாக நடனமாடப் போவதாக பிரபல இந்தி நடிகர் ஷாருக்கான் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

நிர்வாணமாக நடனமாடப் போவதாக கூறியமைக்காக ஷாருக்கானுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரமுடியுமென்று சிலர் பத்திரிகைகளில் கருத்துவெளியிட்டிருக்கிறார்கள்.

இதையறிந்த ஷாருக்கான், 'ஒரு பகிடியைக் கூட இவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்களா? எதற்காக எனது பகிடியைப் பெரிதுபடுத்திப் பிரச்சினையாக்கப் பார்க்கிறார்களோ தெரியவில்லை' என்று கவலை தெரிவித்திருக்கிறார்.

என்னை நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியுமென்று கூறுகிறார்கள். எப்போது தான் இந்தப் பேர்வழிகள் நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்ளப் போகிறார்களோ நான் அறியேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.பி.எல்.போட்டிகளில் நடனமாடுவதைப் பற்றி ஒரு பகிடியாகத்தான் நான் அதைச் சொன்னேன். எனது அணி வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக்கொண்டால் கூட நான் நிர்வாணமாக நடனமாடமாட்டேன்.யார் தான் அவ்வாறு செய்வார்கள் பகிடிவிடுவதே ஆபத்தானதாகிவிட்டதே என்றும் கூறியிருக்கும் ஷாருக்கான் இனிமேல் நான் குளியலறையில் கூட நிர்வாணமாக நின்று குளிக்கமாட்டேன் என்று சுவாரஸ்யமாகக் குறிப்பிட்டார்.

ஷாருக்கானின் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி தற்போது 6 ஆவது இடத்தில் இருக்கிறது.

# மனிதனுக்கு கடவுள் ஆயுள் கொடுத்த கதை



கடவுள் கோவேறு கழுதையைப் படைத்துவிட்டு அதனிடம் 'நீதான் கோவேறு கழுதை. நீ புல்லையே சாப்பிட வேண்டும். உனக்கு விவேகம் கிடையாது. நீ 35 வருடங்கள் உலகில் வாழ்வாய்' என்று கூறினார்.

புல்லைச் சாப்பிட்டு விவேகம் இல்லாத வாழ்க்கையை 35 வருடங்களுக்கு நடத்த முடியாது. 35 வருடங்கள் மிகவும் நீண்டவையாகும். எனக்கு 20 வயதுக்குக் குறையாத ஆயுளைத் தந்தால் போதும் என்று கோவேறு கழுதை கடவுளிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டது.


அப்படியே ஆகட்டும் என்று கூறி கோவேறு கழுதைக்கு 20 வருட ஆயுளைக் கொடுத்தார் கடவுள்.

அடுத்து நாயைப் படைத்த கடவுள் அதனிடம் 'நீ தான் நாய். மனிதர்களின் வீடுகளில் நீ காவல் காக்கும் வேலையைச் செய்ய வேண்டும். மனிதர்களுக்கு நல்ல கூட்டாளியாகவும் நீ இருக்க முடியும். மனிதர்கள் சாப்பிட்ட உணவின் மிச்சங்களையே நீ உண்டு வாழவேண்டும். நீ 30 வருடங்கள் வரை வாழலாம்' என்று கூறினார்.



'மனிதர்களின் வீடுகளுக்கு காவல் இருந்துகொண்டு அவர்களின் மீதி உணவுகளையே உட்கொண்டு வாழும் நிலையை 30 வருடங்களுக்குத் தொடருவதென்பது கஷ்டமான காரியம். எனக்கு 10 வருடங்களுக்கும் குறையாத ஆயுளைக் கொடுத்தருளுங்கள்' என்று கடவுளிடம் நாய் மன்றாடியது.

கடவுளும் அப்படியே ஆகட்டும் என்று நாய்க்கு 10 வருடங்கள் ஆயுளை வழங்கினார்.



அடுத்து குரங்கைப் படைத்த கடவுள் 'நீ தான் குரங்கு. நீ மரத்துக்கு மரம் தாவ வேண்டும். நீ ஒரு வேடிக்கையான பிராணி. முழு மூடன், 20 வருடங்கள் உலகில் வாழலாம்' என்று கூறினார்.

'உலகில் ஒரு கோமாளியாக 20 வருடங்கள் வாழ்வதென்பது இயலாத காரியம். தயவுசெய்து எனக்கு 10 வருடங்களுக்கும் குறையாத ஆயுளைத் தாருங்கள்' என்று குரங்கு கடவுளிடம் கேட்டுக் கொண்டது.

கடவுளும் அப்படியே ஆகட்டுமென்று 10 வருடங்கள் ஆயுளைக் குரங்கிற்கு வழங்கினார்.

இறுதியாக கடவுள் மனிதனைப் படைத்தார். 'நீ தான் மனிதன். உலகில் பகுத்தறிவுடன் நடமாடக் கூடிய ஒரே மிருகம் நீதான். உலகில் இருக்கக்கூடிய ஏனைய ஜீவராசிகள் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடியதாக உன் புத்திக் கூர்மையை நீ பயன்படுத்தலாம். உலகில் ஆதிக்கம் செலுத்தி நீ 20 வருடங்கள் வாழலாம்' என்று மனிதனிடம் கூறினார் கடவுள்.



'ஏனைய ஜீவராசிகள் மீது ஆதிக்கம் செலுத்தி வாழ்வதற்கு 20 வருடங்கள் போதாது பிரபுவே கோவேறு கழுதை ஏற்றுக்கொள்ள மறுத்த 15 வருடங்களையும் நாய் ஏற்றுக்கொள்ள மறுத்த 20 வருடங்களையும் குரங்கு நிராகரித்த 10 வருடங்களையும் எனக்குத் தாருங்கள்' என்று கடவுளிடம் கெஞ்சிக் கேட்டான் மனிதன்.

கடவுளும் அப்படியே ஆகட்டுமென்று மனிதன் மனிதனாக வாழ்வதற்கு 20 வருடங்களையும் திருமணம் செய்த பிறகு கோவேறு கழுதை போன்று சுமைகளைத் தாங்கிக் கொண்டு வாழ்வதற்கு 15 வருடங்களையும் அடுத்து பிள்ளைகளைப் பெற்று வீட்டுக் காவலனாக இருந்து பிள்ளைகளின் மீதி உணவுகளை உட்கொண்டு நாய் போன்று வாழ்வதற்கு 20 வருடங்களையும் இறுதிக் கட்டத்தில் வயோதிபனாக பேரப் பிள்ளைகளுக்கு வேடிக்கைகாட்டி குரங்கு போன்று வாழ்வதற்கு 10 வருடங்களையும் மனிதனுக்குக் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பற்றரியாக பயன்படும் பக்றீரியாக்கள்




மின்சாரத்தை சேமித்து வைத்துத் தேவையான இடத்தில் பயன்படுத்த பற்றரிகள் உதவுகின்றன. விதவிதமான பற்றரிகள் இருந்தாலும் சார்ஜிங் செய்வது சற்றுச் சிரமமான வேலை. இடத்தையும் அடைக்காமல், மின்சாரம் கொண்டு சார்ஜிங்கும் செய்யாமல் தானாகவே மின்சாரம் தயாரித்து இயங்கும் பற்றரி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதுவும் கண்ணுக்குத் தெரியாத உயிருள்ள பற்றரி. ஆமாம், நுண்ணுயிரிகளான பக்டீரியா க்கள்தான் 'இயற்கை பற்றரி'யாக நமக்கு உதவ இருக்கின்றன.

கடலில் மணலும் தண்ணீரும் சேர்ந்த கலங்களான பகுதிகளில் (கழிமுகம், கடற்கரை) வசிக்கும் பக்றீரியாக்களின் இயக்கத்தில் மின்சாரம் உற்பத்தியாகிறது. அந்த மின்சாரம் அவை சார்ந்திருக்கும் தாவரங்களில் தண்டு, படிமங்களில் சேகரமாவது கண்டு பிடிக்கப்பட்டது. இதை இயற்கை பற்றரியாகப் பயன்படுத்தலாம் என்கின்றனர் கண்டுபிடிப்புக்குச் சொந்தக்காரர்களான டென்மார்க் பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

# வீடுகளுக்கு 'ஏ.சி.' தேவையில்லை

வீடுகளுக்கு இனி ஏ.சி.வசதி செய்ய வேண்டாம். வெய்யிலுக்கும் குளிருக்கும் ஏற்ப வீட்டை இதமாக வைத்திருக்கும் கூரைத் தள ஓடுகள் உருவாக்கப்பட்டு உள்ளன.

அமெரிக்க ஆய்வாளர்கள் தள ஓடுகளில் சில மாற்றங்களைச் செய்துள்ளனர். பெரிய ஹோட்டல்கள், ரெஸ்டோரன்டுகளில் வீணாகும் எண்ணெய் கழிவுகளைப் பயன்படுத்தி புதிய தள ஓடுகள் தயாரிக்கப்பட்டன. அவை வெய்யில் காலத்தில் சூரிய ஒளியை எதிரொளித்து வீட்டுக்குள் குளிர்ச்சியைப் பரப்புகின்றது. அதேபோல் குளிர் நடுங்க வைக்கும் காலங்களில் குளிரை கிரகித்துக் கொண்டு வீட்டுக்குள் வெதுவெதுப்பான சூழலை பரப்புகிறது. இதனால், வீடு எப்போதும் வசந்த மாளிகையாகவே இருக்கும். 'இந்தக் கூரை ஓடுகள் அமைக்கப்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள் வாழ்வில் புதுமையை உணர்வார்கள். வீட்டுக்குள் நிலவும் இதமான சூழல் அவர்களுக்கு சக்தி மிக்கதாக இருக்கும்' என்கிறார்கள் நவீன கூரை வடிமைப்பாளர்கள்.



# நுளம்பு டாக்டர்



நுளம்புக்கடி ஊசி போடுவதுபோல் இருக்கிறது என்று நுளம்புத் தொல்லையைக் குறிப்பிடுவார்கள். அது உண்மையாகப் போகிறது. ஆமாம், நுளம்புகள் டாக்டராகப் போகின்றன. நுளம்பு மூலம் மலேரியா தடுப்பு மருந்தைச் செலுத்தும் தொழில்நுட்பத்தில் வெற்றி கண்டுள்ளனர் ஜப்பான் விஞ்ஞானிகள்.

அனோபிலஸ் நுளம்பு மூலம் மலேரியா காய்ச்சல் பரவுகிறது. இதனால், உலகம் முழுவதும் இலட்சக்கணக்கானவர்கள் இறக்கிறார்கள். இதைத் தடுக்க நுளம்புகளையே பயன்படுத்தலாம் என்பதுதான் விஞ்ஞானிகளின் நவீன கண்டுபிடிப்பு.

ஜப்பானின் ஜிச்சி மருத்துவ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இந்த சாதனையை நிகழ்த்திக் காட்டி இருக்கிறார்கள். 'லெய்ஸ்மேனியா' என்ற தடுப்பு மருந்தை நுளம்புகளின் உமிழ்நீரில் கலக்கும்படி செலுத்துகிறார்கள். நுளம்புகள் நம்மைக் கடிக்கும்போது மருந்து உடலில் சேர்ந்துவிடும்.

மீண்டும் மீண்டும் இது நடைபெறும் போது ஒரு சதம் செலவில்லாமல் எளிதான முறையில் நோய் எதிர்ப்பு சக்தி நுளம்பு மூலம் உலகம் முழுமைக்கும் பரவிவிடும். இனி நுளம்புகள் கடித்தால் நோய்கள் பரவாது. மாறாக நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்




## கிரிமினல்களை காட்டிக்கொடுக்கும் கிருமிகள்

தந்திரமாகச் செயற்பட்டு தப்பிவிடுவதில் குற்றவாளிகள் சாமர்த்தியசாலிகளாக இருக்கிறார்கள். அவர்களை கைரேகை மற்றும் பிற அங்க அடையாளங்களை வைத்து கண்டுபிடிப்பது சிரமம். அவர்களை எளிதில் அடையாளம் காண புலனாய்வுக் குழுவினர் புது வழியைக் கண்டுபிடித்துள்ளனர்.

நுண்ணுயிரிகளான கிருமிகள் குற்றவாளிகளை காட்டிக்கொடுப்பதில் உதவும் என்பதே அந்தக் கண்டுபிடிப்பு. ஒருவரின் உடலில் பல இலட்சக்கணக்கான நுண்ணுயிரிகள் வாழ்கின்றன. கண், மூக்கு, குடல், என ஒவ்வொரு பகுதியிலும் வாழும் நுண்ணுயிரிகளும் வெவ்வேறு வகையாகவும் விதவிதமான பண்புகளையும் கொண்டவையாக இருக்கின்றன.

சாதாரண தொடுதலிலும் இந்தக் கிருமிகள் இடம்பெயர்கின்றன. குறிப்பிட்ட காலத்துக்கு அங்கேயே அழியாமல் நிலைக்கின்றன. அதேபோல ஒவ்வொரு மனிதனின் உடலில் உள்ள நுண்ணுயிரிகளும் வித்தியாசமாக இருக்கின்றன. எனவே, இதைக் கொண்டு புலனாய்வு செய்ய முடியும் என்று கொலரோடா (அமெரிக்கா) பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மெய்ப்பித்துள்ளனர். அவர்களது ஆய்வில் 70 முதல் 90 சதவித அளவில் குற்றவாளிகளை அடையாளம் காணலாம் என்று தெளிவானது. 'பக்றீரியல் ஜெனிடிக் சிக்னேச்சர்' எனப்படும் இந்த முறை எளிதில் பயன்தரும் புதிய புலனாய்வு முறையாக எதிர்காலத்தில் வரப்போகிறது.

# நவீன போன்கள் அறிமுகம்



லப்டொப் மற்றும் டெஸ்க்டொப் கணினி தயாரிப்பில் முன்னணியில் இயங்கும் ஏசர் நிறுவனத்தின் மொபைல் போன்கள் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

உலகின் முதல் ஆண்ட்ராய்ட் 1.6 ஹை டெபனிஷன் போனாக ஏசர் நிறுவனத்தின் லிக்விட் மொபைல் ஸ்மார்ட் போன் வந்துள்ளது. குவால்காம் ஸ்நாப்ட்ராகன் *(1GHz)* என்ற ப்ராச்சருடன் வந்துள்ள முதல் மொபைல் போனும் இதுவே.

இதில் 3.5 அங்குல அகலத்தில் டச் ஸ்கிரீன் ***480x800*** பிக்ஸெல்களுடன் தரப்பட்டுள்ளது. ஜியோ டேக்கிங் இணைந்த 5 எம்.பி.கமெரா, ஓட்டோ போகஸ், எல்.இ.டி.பிளாஷ், ஆக்ஸிலரேட்டர், செல்ப் டைமர், ***2560x1920*** ரெசல்யூசனுடன் தரப்பட்டுள்ளது.

புளூடூத், வை-பி, ஏ.ஜி.பி.எஸ்.*(AGPS)* தொழில்நுட்பம் இன்டர்நெட் நெட்வேர்க் இணைப்பிற்கு துணை புரிகின்றன. *3G/GSM/GPRS/EDGE* நெட்வேர்க் தொழில்நுட்பம் இயங்குகின்றன. வை-பி, புளூடூத் ஆகியவையும் தரப்பட்டுள்ளன.

உள் நினைவகம் 256 எம்.பி. இதனை மைக்ரோ எஸ்.டி கார்ட் மூலம் 32 ஜி.பி.வரை அதிகப்படுத்தலாம். ***1350 mAh*** பற்றரி தொடர்ந்து ஐந்து மணி நேரம் பேசிட வழி தருகிறது.

இந்தப் போனின் தனிச் சிறப்பாக இதன் மூன்று ஹோம் ஸ்கிரீனைக் குறிப்பிடலாம். இதனால், பயன்படுத்தும்போது ஒவ்வொரு ஸ்கிரீனிலும் வெவ்வேறு விட்ஜெட்டுகளை அமைக்கலாம். இதன் வீடியோ ஸ்ட்ரீமிங் திறன்மிகு அருமையான மல்டிமீடியா அனுபவத்தினைத் தருகிறது.

வெள்ளை, கறுப்பு மற்றும் சிகப்பு வண்ணங்களில் உள்ள இந்தப் போன் ஸ்டைலான வளைவுகளுடன் ஸ்லிம்மாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# உறவுச் சுமை



பண்டைநகர்-நாயகன்
(பீரிஸ்)

அப்பாடா ம்ம் என்று முனகியவாறே கட்டிவிரித்த பாயில் மெல்லத் தலை சாய்த்துக்கொண்டாள் கமலம். நாள் முழுவதும் ஆடியோய்ந்து படுக்கைக்கு வந்த... நேரம் இரவு 10.30 மணி தன் குடும்ப நிலையும் அதற்காகத் தான் படும் அவலங்களையும் நினைத்தவாறே விடியப்போகும் மறுநாளின் வேலைப் பளுவை அசைபோட்டவாறே கண்களை மூடிக்கொண்டாள்.

இஞ்சரப்பா இஞ்சரப்பா என்ற கணவனின் தொடர் இருமலுக்கு இடையில் வந்த அந்தரமும் அவசரமுமான ஒலி கமலத்தைப் பற்றியடித்து எழும்ப வைத்தது. என்னப்பா என்றவாறே தலைவாசல் சாக்குக்கட்டிலில் படுத்திருந்த கணவனிட்டை ஓடினாள்

'என்னவோ நெஞ்சுக்க செய்யுது கொஞ்சம் சுடுதண்ணி எடுத்துக்கொண்டுவா, தொண்டேக்க சளியடைக்குது போல' என்றார் அவர். 'ம் பகல் முழுவதும் குடிச்சு திரியவேண்டியது இரவில கொக்கு கொக்கு என இருமி எல்லாரையும் குழப்ப வேண்டியது' என்றவாறே அடுக்களையில் நுழைந்து சுடுநீர்ப் போத்தலில் இருந்த நீரை எடுத்துக்கொண்டு போய் கொடுத்தாள் கமலம். தண்ணீரைப் பருகியபடியே 'நேரமும் விடியப்போது போல, தம்பி எழும்பிட்டானே? அவனை எழுப்பிவிடன் சோதனையும் வரப்போது' என்றவாறே குவளையைத் திருப்பிக்கொடுத்துவிட்டு நெஞ்சைத் தடவிக் கொண்டார் தேவன்.

நுளம்புக்கடியால் விழித்துக்கொண்ட சின்னவன் சிந்து பக்கத்தில் அம்மாவைக் காணாது அவறத் தொடங்கினாள். மூன்று வயதான அவள் தான் 'அக்குடும்பத்தில் கடைக்குட்டி. 'ஓமோம் வாறன் வாறன்' என்ற கமலம் 'நுளம்புத்திரியும் கொளுத்தி வைச்சனான் என்னெண்டு தெரியல்ல' என்றவாறே அவளை அணைத்துக் கொண்டு போர்வைக்குள் புகுந்துகொண்டார். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த இவள் தன் பள்ளிக் காலத்தில் காதலித்த தேவனை கணவனாக்கிக் கொண்டாள். திருமணமான புதிதில் மட்டுமல்ல, மூன்று பிள்ளைகள் பிறந்து, இடப்பெயர்வுகள், இடர்பாடுகளுக்குப் பின் தற்போது கூடவும் குடும்பப் பிணக்கில்லாமல் குடும்பம் செல்கிறது என்றால் அது கமலத்தின் கைவண்ணம் தான்.

தேவன் ஓர் தனியார் நிறுவனம் ஒன்றில் நல்ல வேலையில் இருந்தவர். யாழ்ப்பாண இடப்பெயர்வுடன் எதுவும் அற்றவராய் விசர்பிடித்தவரானார். அன்று முதல் குடிப் பழக்கத்திற்கு ஆளானவர். இன்றுவரை தொடர்ந்தே வருகிறார். கிளாலிக்கு அப்பால் போன கையுடன் மூத்தவனின் படிப்பை நிறுத்தி கையில் உள்ளவைகளை வைத்து ஒருவாறு மத்திய கிழக்கு நாடொன்றிற்கே அவனை அனுப்ப முடிந்தது. இளையவன் ரமேஷ் படிப்பைத் தொடர ஒருவாறு குடும்பத்தை சிக்கனமாகவும் சீராகவும் இழுத்துச் சென்றாள் கமலம். இக்காலத்திலேயே சிந்துவும் அவர்களுக்குக் கிடைத்தது. ஏ-9 திறந்த பின்னர் திரும்பவும் சொந்த இடத்தில் மீள்குடியேறியவர்கள் தற்போது வீட்டுத் தோட்டத்துடன் சொந்த வயலிலும் விதைத்து மூத்தவனின் வருமானத்துடன் ரமேஷின் படிப்பையும் தொடர்ந்து வருகின்றனர். சிந்து பாலர் பாடசாலையில் சேர்ந்து கொண்டாள். கணவனின் கணக்கற்ற போக்கு ஆத்திரமூட்டினாலும் தேவனின் கபடமற்ற நெஞ்சும் குழப்பமிலா நடத்தையும் கமலத்தைக் கவர்ந்ததால் குடும்பம் ஏதோ சந்தோசமாய்ப் போகிறது.

ரமேஷின் A/L முடிவு சாதகமாய் வரவே அவனுக்கு பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்தது. அங்கேயே room எடுத்து தங்கிவிட்டான் அவன். கமலத்தின் மகிழ்ச்சிக்கோ எல்லையில்லை. தேவனும் கூடத் தான் சமூகத்தில் ஒரு நல்ல நிலையில் வரவேண்டும் என்ற வெறியுடன் குடும்ப வண்டியை இழுத்துச் சென்றாள் கமலம். எல்லாச் சுமைகளையும் எண்ணும் போது என்ன வாழ்க்கை இது எப்படித்தான் சுமைகள் தீர்ந்து நிம்மதி கிடைக்குமோ என்ற ஏக்கத்தில் எல்லோரையும் பேசுவதும் உண்டு.

காலம் கனிந்ததோ என்னவோ தேவன் திடீரென எல்லாவற்றையும் விட்டு பழைய வேலையில் மீண்டும் சேர்ந்து கொண்டார். குடும்பம் தலைநிமிர தொடங்கியதை எண்ணி கமலத்தின் முகத்தில் புதுப்பொழிவு தென்பட்டது. காலையில் தேவனும் மகளும் வெளியில் போனால் கமலம் தோட்ட வேலையையும் பார்த்து சமையலையும் முடித்து வைப்பாள். மாலையில் தோட்ட வேலையில் ஈடுபடுவார்கள். இதே இவர்களின் தற்போதைய வழக்கமாக இருந்தது. அன்றும் அவ்வாறே மாலையில் வேலை தொடர்ந்த நேரம் கமலம் மகளுடன் அடுக்களையில் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தாள். தோட்டப் பக்கம் பெரும் வெடிச்சத்தம் கேட்கவே செய்வதறியாது ஓடிய கமலம் இரத்த வெள்ளத்தில் தேவன் அசைவற்றுக் கிடப்பதைக்கண்டு குளறினாள், அழுதாள். அப்படியே மூச்சை பாதிவிட்டாள். நினைவு திரும்பியபோது வீடே அல்லோல கல்லோலப்பட்டுக்கிடந்தது. நினையாதது நிறைவேறியதால் அவளோ தனிமையானாள். எல்லாம் முடிந்தது வசந்தமிங்கு புயலாகமாறிவிட்டது.

இன்றும் அவள் இரவுப் படுக்கையில் மகளுடன் மட்டும் தனிமையில், நினைவுகள் நிழலாட நிம்மதியற்ற விசும்பலுடன் நித்திரை இன்றித் தவிக்கின்றாள். எவ்வளவோ சுமைகளுடன், எதிர்கால ஏக்கங்களுடன் நிம்மதியால் உறங்கியவள் இன்று எந்தச் சுமையும் இன்றி உறக்கமும் இன்றி நடைப்பிணமாய் காலத்தை ஓட்டுகிறாள்.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
'Saturday மெயில் சிறுகதை'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களுக்கு கணினி எதிரியா?

கணினியில் நீண்ட நேரம் பணி புரிபவர்களுக்கு கண்நோவுடன் சார்ந்ததாக ஒரு தொகை கூட்டு விளைவுகள் ஏற்படுவதை பலரும் கூறியிருப்பர். கணினியின் முன் உட்கார வேண்டிய தேவை இருக்கின்றது. கண்வலி, தலைவலி இப்படி நோய் நிலையும் காணப்படுகின்றது. இன்று மட்டும் தான் வலிக்கிறது என்றால் பரவாயில்லை. நாளையும் கணினி முன் அமர்ந்து ஆக வேண்டும். இப்படியாகப் பரிதாப நிலை.

தலைவலி என்று சொல்வதை விட கணினியைக் கண்டாலே தலைவலி என்ற உணர்வு. இவ்வாறான துன்பத்தை உணருபவர் நம் சமூகத்தில் உள்ளனர். கணினி தொடர்பான கற்கைகள் பயில்வோர் மற்றும் கணினியில் தட்டெழுத்தாளர் மற்றும் கணினியை நீண்ட நேரம் பயன்படுத்துவோர் இந்த வகையினுள் இணையத்தள அரட்டையில் பொழுது போக்கும் பலரும் அடங்குகின்றனர்.

பொதுவாகச் சொல்லப் போனால் கணினியை அதிக நேரம் பயன்படுத்துவோர் என்ற பட்டியலில் எல்லாருமே அடங்கும் காலம் தான் இனி உருவாகும். கணினியில் தேவைகள் அதிகரித்து விட்டன. கணினிப் பயன்பாடும் அதிகரித்துவிட்டது.

கணினிப் பயன்பாடு அதிகரித்து விட்ட நிலையில், கணினி தேவைகளும் கூட அதிகரித்து விட்டன. எனவே கண்களுக்கு வலி என்று கணினியை ஒதுக்க முடியாது அதற்காக கண்களைக் கெடுக்கவும் முடியாது.

கண் எவ்வாறு தொழிற்படுகிறது என்பதைப் பற்றி நாம் கவனிக்கும் போது அதன் பகுதிகள் எவ்வாறு நகர்கின்றன எனப் பார்த்தால் தூரப் பொருளைப் பார்ப்பதற்கும், கிட்டப் பொருளைப் பார்ப்பதற்கு ஒளி மிக்க சூழலில் பார்ப்பதற்கு, ஒளி குறைந்த சூழலில் பார்ப்பதற்கு என்று பலவிதமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் இவை. எல்லாம் கண்ணில் தானாகவே செயற்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக கமராவை யாவரும் அறிவோம். அதுவும் கண்ணைப் போன்ற ஒரு செயற்பாட்டு ஒற்றுமையைக் காண்பிக்கின்றது. நாம் கமராவில் கிட்ட உள்ள பொருளைப் படம் எடுப்பதற்கும் தூர உள்ள பொருளைப் படம் எடுப்பதற்கும் என்னமாற்றம் செய்கின்றோம் என்று அனைவரும் அறிவர் Zoom என்ற சொல்லையும் அறிவர்.

இதுபோல கமராவில் வில்லை அசைக்கப்படுகிறது. தூர உள்ள பொருளைப் படம் எடுக்கும் போது வில்லை முன்னோக்கி நகர்கின்றது. ஆனால், எமது கண்ணில் அப்படி வில்லையை நகர்த்த முடியாது. ஆனாலும் இவை எல்லாம் எவ்வாறு நடைபெறுகின்றன இங்கு கண்வில்லை (லென்ஸ்)யின் தடிப்பே மாற்றப்படுகிறது. இதன்போது கிட்ட உள்ள பொருளையும் தூர உள்ள பொருளையும் பார்ப்பதற்கு ஏற்றவாறு கண்வில்லை தடிப்பை மாற்றிக் கொள்கிறது.

உதாரணமாக பலூன் ஊதப்பட்ட நிலையில் கோணவடிவாக இருப்பதாகக் கருதின் அதன் இரு அந்தங்களைப் பிடித்து இழுப்பின் அதன் வடிவம் நீள் கோளமாகும். நீள்கோளமாகும் போது அதன் தடிப்பு சற்றுக் குறையும் அவ்வாறே கண்ணிலும் வில்லைகள் சில தசை நார்களால் இணைக்கப் பட்டுள்ளன. இத்தசை நார்களே எமது பார்வையின் தூரத்திற்கேற்ப கண்வில்லையை ஈர்க்கின்றன. இத்தசை நார்களை நாம் கவனத்தில் கொள்வோம்.

நாம் தொடர்ந்தும் மிகவும் கிட்டவுள்ள கணினித் திரையைப் பார்த்துக் கொண்டிருந்தால் அதற்கான அத்தசை நார்கள் தம்மைத் தொடர்ந்து பேண வேண்டும். அதனால் களைப் படைவதற்கு வாய்ப்புகள் உண்டு தானே. இவை செய்கின்ற வேலையின் அளவைக் கணக்குப் போட்டுப் பார்த்தால் கண்வலி வருவது நியாயம் என்றுதான் தோன்றும். நாமும் தொடர்ந்து கிட்டவுள்ள அதுவும் குறித்த தூரத்திலுள்ள கணினித் திரையை கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருக்க இத் தசைகள் சிறிதும் ஓய்வில்லாமல் தமது தொழிலைச் செய்ய முடியுமா? அத்தசைகளாக எம்மைக் கற்பனை பண்ணிப் பார்த்தால் இச்செயற்பாடு பற்றிக் கோபம் தான் வரும். எனவே, நாம் அவற்றிற்கு குறித்த நேரத்திற்கு ஒரு தடவை ஓய்வு கொடுக்க வேண்டும். அதாவது ஒரு மணி நேரத்திற்கு ஒருதடவை ஐந்து நிமிடமாவது தூரவுள்ள பொருட்களைப் பார்க்க வேண்டும். யன்னல் ஊடாகத் தூரத்தில் உள்ள இயற்கைக் காட்சிகளைப் பார்த்தல் கூட ஓய்வாகவே அமையும்.



இதன்போது நாம் கண்களைச் சிமிட்டிக் கொள்வதும் மிகவும் ஏற்புடையது. கண்கள் உலராமல் இருப்பதற்காகவே கண்கள் சிமிட்டப்படுகின்றன. நாம் கண் இமைக்காமல் சில மணிநேரம் உற்றுநோக்கிய வண்ணம் இருந்தால் எமது கண்ணில் கண்ணீர் வரும். அது கண்ணை ஈரலிப்பாக்கும். இவ்வாறு நிகழாது போயின் கண் வரண்டு போகும். தூசு துணிக்கைகள் காற்றில் உள்ள கிருமிகள் கண்ணில் தாக்கி அழற்சியை உண்டுபண்ணும்.

கணினிப் பாவனை அதிகமுள்ளவர்கள் தமது கண்களைப் பாதுகாத்துக்கொள்ள கணினிக்குப் பாதுகாப்புத் திரையிடலாம். இல்லாவிடின் குறித்த நேர இடைவெளியில் சிறிது நேரம் தூரத்துப் பொருட்களைப் பார்த்து கண்ணின் தசைக்கட்டு மாற்றம் ஒன்றை ஏற்படுத்தலாம். இவை தாண்டித் தொடரும் பிரச்சினையாயின் கண் மருத்துவரை நாடலாம். எனவே, கணினிகள் கண்களுக்கு எதிரிகள் அல்ல. அவற்றைப் பார்க்கும் விதத்தில் தான் உள்ளது. தொடர்ந்து உற்று உற்றுப் பார்ப்பதை தவிர்த்து கண்களிற்கு சிறிது ஓய்வு கொடுப்பின் கணினிகளால் ஏற்படும் **Computer vision syndrome** இலிருந்து விடுதலை பெறலாம். எனவே, நாம் பார்க்கின்ற பார்வையில்தான் உள்ளது கணினி எதிரியா? நண்பனா? என்பது.

டாக்டர் வெ.நாகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கால்பந்திலும் கால்பதிக்க ஆசை

ஐ.பி.எல். தொடர் மூலம் கிரிக்கெட்டில் முத்திரை பதித்த பொலிவூட் நட்சத்திரம் ஷில்பா ஷெட்டி கால்பந்திலும் அசத்தக் காத்திருக்கிறார்.

ஐ.பி.எல்.பாணியில் கால்பந்து லீக் ஒன்றை ஏற்படுத்த ஆர்வம் காட்டி வருகிறார்.



ஷில்பா ஷெட்டி, அவரது கணவர் ராஜ் குந்த்ரா இருவரும் 'எமர்ஜிங் மீடியா குரூப்' நிறுவனத்துடன் இணைந்து ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை (ஐ.பி.எல்.) ஏலத்தில் எடுத்தனர். ஐ.பி.எல். அணிகளில் மிகக் குறைவான விலைக்கு (301.50 கோடி ரூபா) ஏலத்தில் எடுக்கப்பட்டது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிதான். ஆனால், 2008 ஆம் ஆண்டு நடந்த முதல் ஐ.பி.எல். தொடரில் வென்று சாதித்தது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி. இதன் மூலம் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான ஷில்பா ஷெட்டிக்கு ஐ.பி.எல். தொடர் வெற்றியைத் தந்தது.

**புதிய விருப்பம்:** இதனையடுத்து ஐ.பி.எல். தொடரைப்போலவே புதிய கால்பந்து லீக் ஒன்றைத் தொடக்க ஏற்பாடு செய்து வருகிறார் ஷில்பா. இதற்கான முயற்சிகளில் தற்போது கவனம் செலுத்தி வருகிறார். முதற்கட்டமாக இந்திய கால்பந்து கூட்டமைப்பு, சர்வதேச கால்பந்து கூட்டமைப்பினருடன் தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். அமைப்பைப் போலவே வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வீரர்கள் இதில் இடம் பெறவுள்ளனர். இது குறித்து ஷில்பாவின் கணவர் ராஜ் குந்த்ரா கூறுகையில்;

'எனக்கு கிரிக்கெட்டை விட கால்பந்து மோகம் அதிகம். இந்தியாவில் கால்பந்தை பிரபலப்படுத்தும் நோக்கில் புதிய லீக் ஒன்றை ஏற்படுத்த விரும்புகிறோம். இதன் மூலம் இந்தியாவிலுள்ள கால்பந்து வீரர்களுக்கு நல்ல எதிர்காலம் ஏற்படும்' என்றார்.



# கவலையில்லா மனிதன்

மூன்றாவது ஐ.பி.எல். 'ருவென்ரி-20' கிரிக்கெட் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. அரையிறுதிக்கு முன்னேற ஒவ்வொரு அணியும் முழுவீச்சில் போராடி வருகின்றன. இதற்காக அணி உரிமையாளர்கள், ஒவ்வொரு போட்டியையும் நேரில் கண்டு ரசிப்பதோடு மட்டுமல்லாமல் வீரர்களுக்குத் தேவையான ஆலோசனை மற்றும் உற்சாகமளித்து வருகின்றனர்.

ஆனால், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளரான பொலிவூட் நடிகர் ஷாருக்கான் எவ்வித கவலையும் இல்லாமல் குஷியாக உள்ளார்.

இதுகுறித்து ஷாருக்கான் கூறியதாவது;

ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணியின் செயற்பாடு மகிழ்ச்சியளிக்கிறது. ஐ.பி.எல். போட்டியை ரசிகர்களுக்காகவும் பொழுது போக்கிற்காகவும் பார்க்க வருகிறேன்.

கிரிக்கெட் குறித்த விடயங்களில் எனது மூக்கை நுழைக்கவிருப்பமில்லை. ஏனெனில் வீரர்களுக்கு எப்படி கிரிக்கெட் விளையாடுவது என்று ஆலோசனை வழங்கினால் எப்படி நடிப்பது என்று எனக்கு ஆலோசனை வழங்கிவிடுவார்கள் (நகைச்சுவையாக).

கிரிக்கெட் குறித்த விடயங்களை எனது சக உரிமையாளர்கள் ஜூஹி சாவ்லா மற்றும் ஜெய் மேத்தா ஆகியோரிடம் விட்டுவிட்டேன்.

இருப்பினும் இத்தொடருக்கு முன் வீரர்களிடம் கடந்த ஆண்டு போல இம்முறை மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திவிடக்கூடாதென்று மட்டும் கூறினேன். இம்முறை கப்டன் கங்குலியின் துடுப்பாட்டம் பாராட்டும் விதமாயுள்ளது. இதேபோல் மனோஜ் திவாரி உள்ளிட்ட சில உள்ளூர் வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவது மகிழ்ச்சியளிக்கிறதென்றார்.



# சுழலும் பந்துகள்



ஐ.பி.எல். போட்டியில் சுழற் அதிக விக்கெட்டுகளையும் கைப் பந்து வீச்சாளர்களின் ஆதிக்க வீச்சாளர்களின் ஆதிக்கம் அதிக

ஐ.பி.எல். போட்டியில் சுழற் விழுகின்றன. 20 ஓவர் போட்டி மட்டுமே அதிகமாக இருப்பதாகவும் மட்டுமே இருப்பதாகக் கூறப்பட்டு

அதிலும் பந்து வீச்சைப் பொறுத் எடுபடுகிறது. சுழற்பந்து வீச்சாளர் கூறப்பட்டு வந்தது. ஆனால், இப் போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் கலக்கி வருகின்றனர். ஆட்டத்தின் விடுகின்றன.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இதுவரை சுழற் பந்து ஆதிக்கமே அதிகமாக

டில்லி அணியில் சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா, டெக்கான் சார்ஜர்ஸ் அணியில் ஓஜா, சென்னை அணியில் முரளிதரன் ஆகியோர் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர். இவர்கள் 3 பேருமே 44 விக்கெட்டுகளை எடுத்துள்ளனர்.

இதேபோல ஹர்பஜன் சிங், ஷேன் வோர்ன் போன்றவர்களும் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளனர். இவர்கள் 5 பேரும் சேர்ந்து 68 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளனர். ஆனால், முன்னணி 5 வேகப்பந்து வீச்சாளர்கள் சேர்ந்து 56 விக்கெட்டுகள் தான் எடுத்துள்ளனர்.

பஞ்சாப்புடன் ராஜஸ்தானின் வெற்றிக்கு வோர்னின் சுழற்பந்து வீச்சுதான் முக்கிய காரணமாக இருந்தது. அவர் மட்டும் 4 விக்கெட்டை வீழ்த்தினார்.

பந்து வீச்சாளர்கள் கலக்கி வருவதுடன் பற்றுகின்றனர். ஆரம்பத்தில் மிதவேகப் மிருந்த போதும் தற்போது சுழற்பந்து மித்துள்ளது.

பந்து மூலம் அதிக விக்கெட்டுகள் யில் துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கம் பந்துவீச்சாளர்கள் பங்கு ஓரளவுக்கு வந்தது.

தவரை வேகப்பந்து வீச்ச மட்டுமே களுக்கு வேலையே இல்லை என்று போது நடந்துவரும் ஐ.பி.எல். களை விட சுழற்பந்து வீச்சாளர்களே போக்கையே சுழற்பந்துகள் மாற்றி

40 போட்டிகள் முடிந்துள்ளன. இவற்றில் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் வருவாரா?

ஐ.பி.எல். தொடரில் ஓட்ட மழை பொழிகிறார் மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின். நல்ல போர்மில் உள்ள அவர் 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியில் இடம்பெற்றிருந்தால் மிகவும் உதவியாக அமைந்திருக்குமென ஹர்பஜன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் அனுபவ வீரர் சச்சின். கடந்த 21 ஆண்டுகளாக விளையாடி வரும் இவர் டெஸ்ட், ஒரு நாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள், அதிக சதமடித்து சாதனை படைத்துள்ளார். 2007 இல் சர்வதேச அளவிலான 'ருவென்ரி-20' போட்டிகளிலிருந்து தானாகவே விலகினார். ஆனாலும், உள்ளூர் தொடரான ஐ.பி.எல். 'ருவென்ரி-20' போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறார்.

**தொடரும் ஓட்ட வேட்டை:**

தற்போது நடக்கும் மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் கப்டனாக அசத்துகிறார் சச்சின். இதுவரை 9 போட்டிகளில் 394 ஓட்டங்கள் குவித்துள்ளார். இவரது கலக்கல் ஆட்டம் கைகொடுக்க, முதலிடத்திலுள்ள மும்பை அணி அரையிறுதி நோக்கி விரைவாக முன்னேறுகிறது.




இதையடுத்து எதிர்வரும் 30 ஆம் திகதி தொடங்கும் 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் அவர் இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதனை சச்சின் ஏற்க மறுக்க, இந்திய அணியில் தேர்வு செய்யப்படவில்லை.

இது குறித்து இந்திய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரும் சக மும்பை இந்தியன்ஸ் அணியின் வீரருமான ஹர்பஜன் கூறியதாவது;

உலகக் கிண்ணத் தொடரில் இம்முறை சச்சின் விளையாடியிருந்தால் அது இந்திய அணிக்கு மிகவும் உதவியாக இருந்திருக்கும். ஆனால், சர்வதேச 'ருவென்ரி-20' போட்டிகளில் பங்கேற்பதில்லை என்று ஏற்கனவே அறிவித்து விட்டார். இம்முடிவை அவர் மாற்றப் போவதில்லை. தற்போதைய ஐ.பி.எல். தொடரில் நான் பந்து வீச்சு மட்டுமல்லாது துடுப்பாட்டத்திலும் பிரகாசிப்பது மகிழ்ச்சியளிக்கிறது. துடுப்பாட்டத்திலும் முன்னேற்றம் காண தொடர்ந்து கடின பயிற்சி மேற்கொண்டு வருகிறேன்.

**சிறந்த பயிற்சி:**

'ருவென்ரி-20' வரவால் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் வேகம் அதிகரித்துள்ளது. வீரர்கள் அதிரடியாக ஆடுகின்றனர். ஐ.பி.எல். போட்டிகள், 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடருக்கு சிறந்த பயிற்சியாக அமைந்துள்ளது. துடுப்பாட்டம் கிளிக் ஆகிவிட்டால் எந்த இலக்கையும் சேஸ் செய்துவிடலாம் என்ற நம்பிக்கை இந்திய அணியில் ஏற்பட்டுள்ளது. மற்ற அணிகளின் வீரர்களும் ஐ.பி.எல். தொடரில் விளையாடுவதால் அவர்களும் பயனடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.





# சச்சின் புகழ்பாடும் பிராவோ

கிரிக்கெட் உலகில் இந்திய மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் புகழ் பாடாதவர்கள் யாருமில்லை. இதற்கு மேற்கிந்திய வீரர் பிராவோவும் விதிவிலக்கல்ல.

ஐ.பி.எல். தொடரில் சச்சின் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியில் பிராவோ இடம்பிடித்துள்ளார். மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் மும்பை அணி இதுவரை விளையாடிய 9 போட்டிகளில் 7 போட்டியில் வெற்றி பெற்று அரையிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்தியுள்ளது. சச்சின் தலைமையில் விளையாடுவது பெருமை அளிப்பதாக பிராவோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து பிராவோ கூறியதாவது;

கடந்த இரண்டு ஐ.பி.எல். தொடரில் ஏமாற்றிய மும்பை அணி, மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் அபாரமாக செயற்பட்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த முன்னேற்றத்துக்கு கப்டன் சச்சினின் கப்டன்ஸி போர்ம் மற்றும் இளம் வீரர்களின் எழுச்சி தான் காரணம். சச்சின் தலைமையில் விளையாடுவதை மிகப்பெரும் கௌரவமாகக் கருதுகிறேன்.

மும்பை அணியில் சச்சினைத் தொடர்ந்து என்னைக் கவர்ந்த இளம் வீரர் அம்பாதி ராயுடு. இவரிடம் 'ருவென்ரி-20' போட்டிகளில் விளையாடக்கூடிய அனைத்துத் தகுதி திறமைகள் உள்ளது. இதேபோல சவுரப் திவாரி, சதீஷ் உள்ளிட்ட உள்ளூர் வீரர்கள் நிறையத் திறமைகளுடனிருப்பது மகிழ்ச்சியான விடயம். இதில் திவாரி கடந்த ஆண்டை விட இம்முறை நல்ல முன்னேற்றம் கண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

எதிர்வரும் 30 ஆம் திகதி மேற்கிந்தியாவில் 'ருவென்ரி-20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் தொடங்குகிறது. தற்போது ஐ.பி.எல். தொடரில் விளையாடி வருவது உலகக் கிண்ணத் தொடரில் சாதிக்க கைகொடுக்கும். தவிர இம்முறை உலகக் கிண்ணத் தொடர் நடக்க இருப்பதால் சொந்த மண்ணில் சாதிக்க மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறேன்.

ஐ.பி.எல். போட்டியில் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகிப்பேனென்றார்.

# மூத்த வீரரின் கவலை

ஐ.பி.எல். 'ருவென்ரி-20' தொடரில் தன்னைப் போன்ற ஓய்வுபெற்ற வீரர்களை அழைக்காததற்கு வருத்தம் தெரிவித்துள்ளார் அவுஸ்திரேலிய முன்னாள் கப்டன் ஸ்ரீவோ.

இது குறித்து அவர் கூறியதாவது;

ஐ.பி.எல். தொடர் 'ருவென்ரி-20' போட்டிகளின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றி வருகிறது. இத்தொடரில் பெரும்பாலும் இளம் வீரர்கள் தான் விளையாடி வருகின்றனர். கில்கிறிஸ்ட், ஷேன்வோர்ன் என ஒரு சிலரைத் தவிர்த்து என்னைப்போன்ற ஓய்வு பெற்ற வீரர்களுக்கு இதில் வாய்ப்பளிக்கப்படவில்லை.

ஐ.பி.எல். தொடர்மூலம் இன்றைய இளம் வீரர்கள் அதிக பணம் சம்பாதிக்கின்றனர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்புவரை தேசிய அணியில் வாய்ப்புப்பெற இளம் வீரர்கள் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. நாட்டுக்காக விளையாட முடியவில்லை என்பது ஒருபுறம் இருந்தாலும் பணம் சம்பாதிக்க முடியவில்லை என்ற ஏக்கமும் மறுபுறம் இருந்தது. ஆனால், ஐ.பி.எல். தொடர் இளம் வீரர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது.

இன்றைய இளம் வீரர்கள் டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஆர்வம் காட்ட வேண்டும். இவ்வகைப் போட்டிகள் தான் வீரர்களின் உண்மையான திறமையை வெளிப்படுத்துமெனவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அணுவாயுதமற்ற உலகை உருவாக்கும் ஒபாமாவின் கனவு நனவாகுமா?

அணுவாயுதப் பாதுகாப்பு குறித்து ஆராயும் மிக முக்கிய உச்சி மாநாடொன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை வாஷிங்டனில் ஆரம்பமாகவுள்ளது.

முன்னெப்போதுமில்லாத வகையில் நடைபெறவுள்ள இம் மாநாட்டின் முக்கிய நோக்கம் பயங்கரவாதிகளின் கரங்களில் அணு வாயுதங்கள் சிக்கி விடாதவாறு அவற்றை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் ஆராய்வதாகும்.

இவ்விடயத்தில் இணக்கப்பாடொன்றை எட்ட முடியுமென்பதில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அதீத நம்பிக்கை கொண்டுள்ளார்.

இம் மாநாட்டில சீன ஜனாதிபதி ஹூ ஜிந்தாவோ, ரஷ்ய ஜனாதிபதி டிமித்ரி மித்விடேவ், பிரான்ஸ் ஜனாதிபதி நிகொலஸ் சார்கோஸி, ஜேர்மன் சான்ஸிலர் அஞ்ஜெலா மார்கெல் மற்றும் இந்தியா, பாகிஸ்தான் பிரதிநிதிகள் உள்ளிட்ட 47 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அண்மைக் காலமாக தாய்வான் மற்றும் தலாய் லாமா உள்ளிட்ட பல விவகாரங்களில் அமெரிக்காவுடன் முரண்பட்டிருக்கும் சீனா பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை போன்ற விடயங்களில் தனது ஒத்துழைப்பை வழங்க முன்வந்திருப்பது ஒபாமாவுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்படுகிறது.

இம் மாநாட்டிற்காக வரையப்பட்ட உடன்படிக்கையில் அடுத்த 4 வருடங்களுக்குள் பேராபத்தை ஏற்படுத்தக் கூடிய அனைத்து வகையிலான அணுவாயுதங்களையும் எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்த அமெரிக்காவின் பிரேரணை உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனினும் 12-13 ஆம் திகதிக்குள் இவ் உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னதாக இது மீள் பரிசீலனைக்குட்படுத்தப்படுமெனவும் தெரியவந்துள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்காவின் உத்தியோகபூர்வ நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் நடைபெறும் ஒரு சந்திப்பாக அவதானிகளும் இராஜதந்திரிகளும் இம் மாநாட்டைக் கருதுகின்றனர்.

அணுவாயுதங்கள் பயங்கரவாதிகளின் கரங்களில் சிக்கிவருவதற்கு இடமளிக்கக் கூடாதென்பது மட்டுமே பெரும்பாலானோரின் கவலையாக இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

1970 இல் ஏற்படுத்தப்பட்ட அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத ஆனால், அணுவாயுதங்களைக் கொண்டுள்ள நாடுகளான இந்தியா மற்றும் பாகிஸ்தானின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

அத்துடன் இந்தியா, பாகிஸ்தான் பட்டியலில் உள்ளடக்கக்கூடிய இஸ்ரேலும் இதில் கலந்து கொள்ளவுள்ள அதேவேளை, தன்னிடம் அணுவாயுதங்கள் இருப்பதை இஸ்ரேல் ஒருபோதும் உறுதிப்படுத்தவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத அச்சுறுத்தலை பாரியளவில் எதிர்கொள்ளும் நாடாக பாகிஸ்தான் இருப்பதாலும் அணு நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடரும் சர்ச்சைக்குரிய நாடுகளான ஈரான், வடகொரியா மற்றும் லிபியாவுக்கு பாகிஸ்தான் அணு விஞ்ஞானியினாலேயே அணுத் தொழில்நுட்பம் வழங்கப்பட்டிருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதாலும் பாகிஸ்தான் இம்மாநாட்டின் முக்கிய விவாதப் பொருளாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், அணு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் மேற்குலகின் தடைகளை எதிர்கொள்ளும் ஈரானும் வடகொரியாவும் இம் மாநாட்டிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளன.

இம்மாநாடு வெற்றியளிக்கும் பட்சத்தில் அணுவாயுத பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இச் சந்திப்பின் உண்மையான இலக்குகளை வெல்வதற்கு 4 வருடங்களுக்குள் அணுவாயுதப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு உறுதியளித்திருக்கும் நாடுகள் அனைத்தும் இதற்கான நடவடிக்கைகள் எந்தளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கின்றன என்பதை இரண்டு வருடத்தில் மீண்டும் கூடி மதிப்பிட வேண்டுமெனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையில் அணுவாயுதப் பயன்பாட்டைக் குறைக்கும் புதிய பாதுகாப்புக் கொள்கையை இவ் வார முற்பகுதியில் அமெரிக்கா வெளியிட்டுள்ளன. அதேவேளை, தம்மிடமுள்ள அணுவாயுதங்களைக் குறைப்பதற்கான முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கையில் கடந்த வியாழக்கிழமை அமெரிக்காவும் ரஷ்யாவும் கைச்சாத்திட்டுள்ளன.

இவ்வாறான முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு மத்தியில் இம்மாநாட்டில் அடையப்படும் வெற்றி, அமெரிக்காவின் தலைமையில் அணுவாயுதப் பாதுகாப்பை முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகம் ஒன்றிணைந்துள்ளது என்ற செய்தியை உலகுக்கு உணர்த்துமென அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அமைதிக்கான நோபல் பரிசை வென்ற ஒபாமா கடந்த வருடம் நிகழ்த்திய முக்கிய உரையொன்றில் அணுவாயுதமற்ற உலகை உருவாக்குவதே தனது கனவு எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதனடிப்படையில் நோக்குகையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் அவரின் கனவை நனவாக்குவதற்கான அடித்தளத்தைப் பலமாக இடுவதற்கு உதவி புரியுமென நம்பப்படுகிறது.

ஆனால், இம்மாநாட்டில் வழங்கப்படும் உறுதிமொழிகள் எந்தளவுக்கு மனப்பூர்வமாக நிறைவேற்றப்படும் என்பதிலேயே இவ் அடித்தளத்தின் உறுதி தங்கியுள்ளது.

ஏனெனில் ஒவ்வொரு நாடும் தனது பலத்தை நிரூபிப்பதற்கான ஒரு கருவியாக அணுவாயுதத்தைப் பயன்படுத்தி வரும் இன்றைய காலகட்டத்தில் அவற்றை அழிப்பதற்கோ அல்லது குறைப்பதற்கோ எந்தவொரு நாடும் மனப்பூர்வமாக முன்வருமா? என்பது சிந்தனைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான சூழ்நிலையில் ஒபாமாவின் முயற்சிகள் எந்தளவுக்கு வெற்றியளிக்கப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஒபாமாவின் கனவு நடைமுறைச் சாத்தியமற்றதாகத் தென்பட்டாலும் கூட அது வரவேற்கப்படவேண்டியதொன்று என்பதுடன் அதனை நனவாக்குவதற்கான முயற்சிகள் இயன்றவரை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

## சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி



ரஷ்யாவின் செஞ்சதுக்கத்தில் நடைபெறவுள்ள நாஷி யுத்த வெற்றியின் 65ஆவது ஆண்டு நிறைவு தினக்கொண்டாட்டங்களுக்காக அணிவகுப்பு பயிற்சியில் ஈடுபட்டுள்ள ரஷ்ய இராணுவத்தினரைக் காண்கிறீர்கள்.

## முட்டாள்கள் தினச் செய்தியால் சட்டரீதியான சிக்கலை எதிர்கொண்டுள்ள பத்திரிகை

முட்டாள்கள் தினமான கடந்த முதலாம் திகதி மக்களை ஏமாற்றுவதற்காக செய்தியொன்றை வெளியிட்ட ஜோர்தானிய பத்திரிகை சட்டச் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது.

ஏப்ரல் முதலாம் திகதி ஏனையவர்களை முட்டாள்களாக்கும் நோக்கில் தனிநபர்களும் ஊடகங்களும் பல்வேறு விதமான ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவது வழமையானது.

ஆனாலும் சிலவேளைகளில் இந்த ஏமாற்றுச் செயற்பாடு அதாவது ஏனையவர்களை முட்டாளாக்க முனைவது விபரீதத்திலும் முடிவடைவதுண்டு.

இந்நிலையில் கடந்த முட்டாள்கள் தினத்தன்று ஜோர்தானிய பத்திரிகையான அல்-ஹராட்ஸின் முன்பக்கத்தில் ஜோர்தானின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள பாலைவனத்தில் விமானம் மூலம் வேற்றுக் கிரகவாசிகள் வந்திறங்கியுள்ளதாக முட்டாள்கள் தினச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அத்துடன் தொலைத்தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டிருப்பதுடன் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் கூடியுள்ளதாகவும் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகைச் செய்தியை வாசித்து அச்சமடைந்த பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைக்குச் செல்லவிடாது தடுத்ததுடன் சிலர் தமது பணிகளுக்கும் செல்லாது வீடுகளில் இருந்துள்ளனர்.

வேற்றுக்கிரகவாசிகள் தம்மைத் தாக்கலாமென்ற அச்சத்தால் சுமார் 13 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் பாலைவனப் பகுதிக்கு ஜோர்தான் படையினரை சென்று அங்கு வேற்றுக்கிரகவாசிகள் உள்ளனரா என்பதை சோதனையிடுமாறு ஆளுநர் மொஹமட் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் அல்-ஹராட்! பத்திரிகை இச்சம்பவம் குறித்து மன்னிப்புக் கோரியுள்ள போதும் அதற்கெதிரான சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்




# பொலிஸ் குரங்கு









தாய்லாந்தின் தென்பகுதியில் யால மாகாணத்தின் சைபூரி மாவட்டத்தில் பொலிஸ் திணைக்களத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் 5 வயதான குரங்கு பொலிஸ் காரர்களுடன் சேர்ந்து ரோந்துப்பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நொதேர்ன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி, 336ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.